வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு


Eelanadu

ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.01.2023 வியாழக்கிழமை | இதழ் : 41 | பக்கங்கள் : 16

# யாழ்ப்பாணம் மாநகர சபையில் சைவ சமயியை முதல்வராக்குக!



## மறவன்புலவு சச்சிதானந்தன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜனவரி 19

**சைவ மக்களை பெரும்பான்மையாக கொண்ட யாழ். மாநகர சபையில் சைவ சமயியே முதல்வராக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.**

இது குறித்து அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

55 ஆயிரம் சைவர்கள் 58 வீதம் - தோராயமாக 35 ஆயிரம் கிறிஸ்தவர்கள் 37 வீதம் - தோராயமாக 4,500 முஸ்லிம்கள் 5 வீதம் - தோராயமாக 20 பௌத்தர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் வாழ்வோர் தொகை 95 ஆயிரம் தோராயமாக. ஆண்டுதோறும் யாழ்ப்பாண மாநகர சபைக்குரிய வருவாயில் கணிசமான தொகையாக ரூபாய் 10 கோடி வரை நல்லூர் வள்ளி - தெய்வானை உடனுறை முருகன் கோயில் ஆண்டு திருவிழாவை

15

# தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பை சிதைத்து துரோகமிழைத்து விட்டீர்கள்!

## இரா. சம்பந்தனுக்கு தமிழரசின் தவராசா கடிதம்

கொழும்பு, ஜன. 19

"ஒப்பாரும்மிக்காருமில்லா தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னாபின்னமாக்கி வரலாற்று துரோகத்துக்கு பாத்திரவாளியாகி விட்டீர்கள்" - இவ்வாறு இரா. சம்பந்தனுக்கு சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் மத்தியகுழு, அரசியல்குழு உறுப்பினருமான கே. வி. தவராசா. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இரா. சம்பந்தன் எம். பிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

போர் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு கலங்கரை விளக்கம் கூட்டமைப்பு மட்டுமே. தமிழினத்தின் விடுதலையை இலக்காகக் கொண்டுதான் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது ஒருபலம் பொருந்திய இயக்கமாகப் புலிகள் நிலைபெற்ற

15

# கடனை மறுசீரமைக்க இணங்கியது இந்தியா!

## ஐ. எம். எவ்விடம் உறுதிப்படுத்தியது

கொழும்பு, ஜனவரி 19

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக சர்வதேச நாணய நிதியத்துக்கு (ஐ. எம். எவ்.) இந்தியா அறிவித்துள்ளது.

15

# ஜெய்சங்கர் இன்று வருகிறார்!

கொழும்பு, ஜன. 19

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இன்று இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் அவர், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தி

15

# 13ஐ அமுலாக்கும் ஜனாதிபதியின் பாவத்தில் பங்குதாரர் ஆகாதீர்கள்!

## தமிழ் தலைமைகளை கேட்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜன. 19

13ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்தினால் நாட்டில் தேவையில்லாத பிரச்னை தோற்றம் பெறும். ஆகவே, ஜனாதிபதியின் இந்த பாவச்செயலில் பங்குதாரராகுவதை தமிழ் அரசியல் தலைமைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், புனர்வாழ்வு பணியக சட்டத்தை கொண்டு அரசியல் பழிவாங்கல் செயல்பாடுகளில் ஈடுபடுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள

15

# மகிந்த, கோட்டாபயவுக்கு ஏனைய நாடுகளும் தடை விதிக்க வேண்டும்!

## சர்வதேச மன்னிப்பு சபை

கொழும்பு, ஜன. 19

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மற்றும் ஒரு முன்னாள் இராணுவ சிப்பாய் மற்றும் கடற்படை அதிகாரி மீது தடை விதித்து கனடா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஏனைய அரசாங்கங்களும் பின்பற்ற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை

15

# வேலன் சுவாமிகள் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டார்!



யாழ்ப்பாணம், ஜன. 19

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் நல்லூர் சிவகுரு ஆதினத்தின் வேலன் சுவாமிகள் நேற்று புதன் கிழமை கைது செய்யப்பட்டார். எனினும், அவர் நேற்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தேசிய பொங்கல் விழாவுக்காக கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரின் வருகையை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின்பேரில் பேரணிப் போராட்

15

# புனர்வாழ்வு சட்டமூலம் நிறைவேறியது!

கொழும்பு, ஜன. 19

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் 17 மேலதிக வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 06 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்த சட்டமூலம் சமர்

15



# அரசமைப்பின் சிவில் பிரதிநிதிகள் நியமனத்துக்கு மன்று அனுமதி!

கொழும்பு, ஜன. 19

புதிதாக அமைக்கப்படவுள்ள அரசமைப்பு பேரவைக்கு சிவில் பிரதிநிதிகளாக கலாநிதி பிரதாப் இராமானுஜம், மருத்துவர் தில்குஷி அனுலா விஜயசுந்தர, கலாநிதி வெலிகமவிதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோரை நியமிக்க பிரதமர் தினேஷ் குண

15

# இப்படியும் நடக்கிறது...!

யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது பழமொழி. கோவில் யானையின் காலில் மணி கட்டியிருப்பார்கள். யானை மெல்ல மெல்ல நடந்து வரும். யானை வருவது தெரிவதற்கு முன்னே யானையின் காலில் கட்டப்பட்டிருக்கும் மணி ஓசை யானை வருவதை சொல்லிவிடும் என்பதே அதன் பொருள்.

தேர்தல் ஒன்று வருகின்றது என்றால், பிரச்னை முன்னதாகவே வந்துவிடும் என்பது தமிழரசு கட்சியில் எழுதப்படாத விதியாக மாறிவிட்டது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடக்கவிருக்கின்றது. அதற்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ள தொடங்கியிருக்கின்றது தேர்தல்கள் ஆணைக்குழு.

இன்றைய நிலையில் தேர்தல்கள் நடந்தால் அடுத்த மார்ச் இருபத்தியோராம் திகதி புதிய உறுப்பினர்கள் பதவியேற்க வேண்டும். தேர்தல் ஏதேனும் ஒரு காரணத்தால் பிற்போடப்பட்டால்கூட, தற்போதைய சபைகளின் பதவிக்காலம் அன்றுடன் முடிந்துவிடும். அதன்பின்னர், சபைகளின் செயலாளர்களே விசேட ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டு சபைகள் இயங்கும்.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு புதிய முதல்வரை தேர்ந்தெடுப்பதாற்கான தேர்தல் இன்று நடைபெறவிருக்கின்றது. அந்த முதல்வர் பதவியில் இருக்கப்போவது இன்னும் இரண்டு மாதங்களுக்குத்தான். ஆனால், அந்த இரண்டு மாத முதல்வர் தேர்தலுக்காக ஒரு வேட்பாளரை தெரிவுசெய்வதற்காக தமிழரசு இரண்டு நாட்கள் கூடி ஆராயவேண்டிய நிலை.

கடைசியாக முன்னாள் மேயர் ஆர்னோல்ட் போட்டியிடுவது என்று தமிழரசு முடிவுசெய்திருக்கின்றது.

ஆர்னோல்ட், ஏற்கனவே மேயராக இருந்தவர். அவர் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பதவியிழந்திருந்தார். அவர் பதவியிழந்த பின்னர் புதிய மேயரை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் தமிழரசு மீண்டும் ஆர்னோல்ட்டையே வேட்பாளராகக் களம் இறக்கியது. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த மணிவண்ணன் திடீரென்று களத்தில் குதித்தார். அவருக்கு அந்த தேர்தலில், அவரோடு முன்னணியின் உறுப்பினர்களில் எத்தனை பேர் ஆதரவு வழங்குவார்கள் என்பதை அவர் பரீட்சித்துப் பார்ப்பதற்காக போட்டியிட்டிருக்கலாம். ஆனால், அவரே எதிர்பார்க்காதவாறு முன்னணியில் சிலரும், ஈ. பி. டி. பியின் உறுப்பினர்களும் வாக்களிக்க அவர் மேயரானார்.

மணிவண்ணனோடு ஒத்துப்போகாத முன்னணி உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்தனர். ஆனால், அப்போது ஆர்னோல்ட் போட்டியிடாமல் இன்னார் போட்டியிட்டால் தாங்கள் ஆதரிப்போம் என்று முன்னதாகவே அவர்கள் அறிவித்திருந்தனர். அவர்கள் கூட்டமைப்பு தமது உறுப்பினர் சொலமன் சிறில் அவர்களை வேட்பாளராக நிறுத்தினால் ஆதரிப்போம் என்று முன்கூட்டியே அறிவித்திருந்தபோதிலும் கூட்டமைப்பு (தமிழரசு) மீண்டும் ஆர்னோல்ட்டை நிறுத்தி பரீட்சித்துப் பார்க்கப்போய், மணிவண்ணனை மேயராக்கியது.

அப்போது தாம் செய்த தவறை திருத்திக் கொள்ள விரும்பாத தமிழரசு, நேற்று முன்தினம் நடந்த, இரண்டு மாதங்களுக்கான மேயராக யாரை நிறுத்துவது என்பதற்கான கூட்டத்தில் சொலமன் சிறில் அவர்களையா மீண்டும் ஆர்னோல்ட்டையா நிறுத்துவது என்பது குறித்து ஆராய்ந்திருந்தது.

அந்தக் கூட்டத்தில், சொலமன் சிறில் தன்னை இந்தத் தடவை வேட்பாளராக நியமிக்காவிட்டால், தான் அரசியலில் இருந்தே ஒதுங்குகிறேன் என்று தெரிவித்திருந்தார் என்றும் செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், நேற்று நடந்த கூட்டத்தில் அவரே ஆர்னோல்ட்டை வேட்பாளராக தெரிவுசெய்திருந்தமை பலருக்கும் ஆச்சரியத்தை தந்திருந்தது.

முதல் நாளன்று தானே போட்டியிடவேண்டும் என்று பிடிவாதமாக இருந்த சிறில், மறுநாள் திடீரென்று ‘பல்டி’ அடித்ததைக் கண்ட ஊடகவியலாளர்கள் அவரிடம் எதற்காக இந்த திடீர் மாற்றம் என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில் ஆச்சரியத்தை தந்தது.

‘நான் ஒரு கத்தோலிக்கன். கத்தோலிக்க திருச்சபையின் கட்டளையை மீறமுடியுமா’ என்று கேட்டிருக்கிறார் அவர். சொலமன் சிறில் அவர்களும் கத்தோலிக்கர்தான். ஆனாலும், அவர்களின் தெரிவு ஏனோ ஆர்னோல்ட்டாகவே இருந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட சிறிலின் முதல் அடையாளம் அவர் தமிழன் என்பதுதான். அவரைப் பொறுத்தவரை மத அடையாளம் என்பது இரண்டாம் பட்சமானதுதான். அதனால் அவர் தெரிவாவது பலருக்கும் பிடித்தமானதாக இல்லாமல் இருந்திருக்கலாம்.

ஆக, தமிழ் அரசியலில் திறமை, இனப் பற்று என்பதெல்லாம் இரண்டாம் பட்சமானதுதான்.

மணிவண்ணனுக்கு இந்தத் தடவையும் ஈ. பி. டி. பி. கைகொடுக்குமா என்பது தெரியவில்லை. தமிழரசு தனித்துப் போனாலும், கூட்டமைப்பின் ரெலோ, புளொட் கட்சிகளின் உறுப்பினர்கள் மணிவண்ணன் மேயராவதைத் தடுப்பதற்காக தமிழரசு வேட்பாளருக்கே வாக்களிக்கலாம். என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# 2005இற்கு பின்னர் பிறந்தவர்களுக்கு தே. அ. அட்டை வழங்கல் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 19

தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளின் பற்றாக்குறை காரணமாக 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொதுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை மாத்திரமே ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கும் என அதன் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்பட்ட ஆவணம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை செல்லுபடியாகும் என ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளுக்கு தற்போது நிலவும் தட்டுப்பாடு நீக்கப்படும் வரை தேசிய அடையாள அட்டை விநியோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பெருந்தொகை கஞ்சாவுடன் இருவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம், யால வனப் பகுதிகளில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக கே. கே. எஸ். வீதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 34 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்டவர் 18 வயதுடைய மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சந்தேக நபரை வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேசமயம், யால வனப் பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் கஞ்சா பயிர் தோட்டத்தை நடத்தியவர் கைது செய்யப்பட்டார். இதன் போது, 8,400 கஞ்சா செடிகள், 46 கிலோ 650 கிராம் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. (ஐ)

# சிறுமியை கர்ப்பமாக்கிய இளைஞருக்கு மறியல்!

முல்லைத்தீவு, ஜன. 19

முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் முல்லைத்தீவு நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் பகுதியை சேர்ந்த 21 வயது இளைஞன் 15 வயதுடைய சிறுமியுடன் கடந்த 8 மாத காலமாக குடும்பமாக வாழ்ந்து வந்து, சிறுமியை கர்ப்பமாக்கியுள்ளார்.

இந்த நிலையில், சிறுமியை கர்ப்பவதி கிளினிக்கிற்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு சென்றபோது, சிறுமியின் வயதை அறிந்த மருத்துவர்கள் சிறுமி கர்ப்பமானமை தொடர்பிலான பரிசோதனையை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் குறித்த சிறுமி 7 மாத கர்ப்பமாக காணப்பட்டுள்ளார். சிறுமி பாதுகாப்பான மருத்துவ பராமரிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சட்டத்துக்கு முரணான இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இளைஞன் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இளைஞனை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சிறுமியை சட்டத்துக்கு முரணாக குடும்பமாக வாழ வைத்த சிறுமியின் பெற்றோர்களை விசாரணை செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். (ஐ)

# வரியை நீக்கினால் முட்டை 40 ரூபாய்க்கு

கோழிப் பண்ணைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான வரியை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், ஒரு முட்டையை 40 ரூபாய்க்கு வழங்க முடியும் என மேல்மாகாண முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

டீசல், பெற்றோல், நெல், புண்ணாக்கு மற்றும் சோளம் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதால், முட்டையின் விலையும் அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் நிலேஷ் ரூபசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், சிலர் கமிஷன் பெறும் நோக்கில் வெளிநாடுகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அதிக முனைப்பு காட்டி வருவதாகவும் மேல் மாகாண முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போது, சந்தையில் முட்டைக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பல்வேறு பகுதிகளிலும் முட்டையொன்று 55 ரூபாய் முதல், 64 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பால் புரைக்கேறி குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

தாய்ப்பால் குடித்து விட்டு உறங்கிய பெண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

அல்லைப்பிட்டி பகுதியை சேர்ந்த சுலக்சன் ரேணுகா எனும் குழந்தையே உயிரிழந்தது.

குழந்தையின் தாயார் காலை குழந்தைக்கு பால் கொடுத்து உறங்க வைத்த பின்னர் நீண்ட நேரமாக குழந்தை எழும்பாததால், குழந்தையை தாயார் சென்று பார்த்த வேளை குழந்தை அசைவின்றி காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை குழந்தை ஏற்கனவே உயிரிழந்ததாக பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழில் கட்டுப்பணம் செலுத்தியது!



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி நேற்று புதன்கிழமை செலுத்தியது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் கட்சியின் சட்ட ஆலோசகர் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் இதன்போது கட்டுப்பணம் செலுத்தப்பட்டதாக ந. காண்டீபன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu
19.01.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தனின் நிலை?

பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. அடுத்த கட்ட பேச்சுக்கு இன்னும் அழைப்பு வரவில்லை. அழைப்பு வந்தால் அது பற்றி நாம் பரீசிலிப்போம் - இவ்வாறு, சம்பந்தன் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ரணில் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை - அவர் கூறுவதையெல்லாம் செய்யக்கூடிய நிலையில் அவர் இருக்கின்றாரா? - என்னும் கேள்விகளுண்டு. ரணிலில் பேச்சுகளில் நியாயமான சந்தேகங்கள் இருந்தால் அதில் தவறில்லை. ஆனால், முதலில் பேச்சுக்கு செல்வதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு முன்னர், எவ்வாறு செல்வது - எப்படிச் செல்வது பற்றியே சம்பந்தன் முதலில் சிந்திக்க வேண்டும்.

சம்பந்தன் இப்போது யாரென்னும் கேள்விக்கே தெளிவான பதில் எவரிடமும் இல்லை. ஏனெனில், இப்போது உத்தியோகபூர்வமான மூன்று கட்சிகளின் கூட்டமைப்பு இல்லை. அந்த மூன்று கட்சி கூட்டமைப்பின் தலைவராகவே சம்பந்தன் இருந்தார். ஆனால், தமிழரசு கட்சி தனியாக செல்லும் முடிவை எடுத்த பின்னணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சியில்லை. இந்த நிலையில் தாங்கள் கூட்டமைப்பாக இயங்கவுள்ளதாக ஏனைய கட்சிகள் அறிவித்திருக்கின்றன. கூட்டமைப்பை அவ்வாறு ஏனையவர்கள் பயன்படுத்த முடியாதென்று தமிழரசு கட்சி கூறுகின்றது. இந்த நிலையில் சம்பந்தன் தொடர்ந்தும் கூட்டமைப்பின் தலைவராக இருப்பதும் கேள்விக்குறியாகியுள்ளது. சம்பந்தன் முக்கியமென்னும் முன்னைய அபிப்பிராயம் கட்சிகள் மத்தியில் இல்லை.

இந்தப் பின்னணியில், முதலில் சம்பந்தன் தொடர்ந்தும் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்றாரா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். பங்காளிக் கட்சிகள் தொடர்ந்தும் சம்பந்தனை தங்களின் தலைவராக ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதற்கும் இதுவரையில் பதிலில்லை. பங்காளிக் கட்சிகளின் கூட்டமைப்புக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்களென்று அண்மையில் சம்பந்தன் கூறியிருந்தார். அவ்வாறாயின் சம்பந்தனை தொடர்ந்தும் தங்களின் பாராளுமன்ற குழுத் தலைவராக பங்காளிக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை. அவ்வாறாயின் எந்த உரித்தின் அடிப்படையில் சம்பந்தன் பேச்சுக்கு அனைவருக்குமான தலைமை வழங்கப் போகின்றார்?

ரணில் விக்கிரமசிங்கவை நம்புவதா அல்லது இல்லையா என்னும் விவாதங்களுக்கு முன்னர் முதலில் சம்பந்தனை அனைத்து கட்சிகளும் நம்புகின்றனரா என்னும் கேள்விக்குத்தான் முதலில் சம்பந்தன் பதில் தேடவேண்டும். பங்காளி கட்சிகளை அழைத்து இது தொடர்பில் பேச வேண்டும். அதற்கு பின்னர்தான் பேச்சை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் கேள்விகளுக்கு சம்பந்தன் பதிலளிக்க வேண்டும்.

சம்பந்தனைப் பொறுத்தவரையில், அவர் தமிழரசு கட்சியின் தலைமையிலிருந்து வெளியேறிய பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவே இருந்து வந்திருக்கின்றார். அதுவே, அவரின் அரசியல் அடையாளமாகவும் இருந்திருக்கின்றது. இந்தப் பின்னணியில் நோக்கினால், தற்போது, சம்பந்தனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இல்லை - தமிழரசு கட்சியும் இல்லை. எனினும், ஒரு மூத்த அரசியல்வாதி என்னும் வகையிலேயே, ஏனைய கட்சிகள் அவருக்கான மரியாதையை வழங்கி வந்தன. அதுவும் தற்போது கேள்விக்கு உள்ளாகியுள்ளது. இந்த பிரச்னைக்கு முதலில் சம்பந்தன் ஏனையவர்களோடு பேசவேண்டும். ரணிலுடன் பேசுவதற்கு முன்னர் இந்தப் பேச்சு அவசரமானது.

# புகையிரத திணைக்கள காணிகளை மீளப் பெறுவதற்கு சட்ட நடவடிக்கை

*கொழும்பு, ஜன. 19*

*புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை 394 புகையிரத திணைக்கள சேவையாளர்கள் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ளார்கள். அனுமதியின்றி சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை மீள பெற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் முன்வைத்த வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*மேலும், புகையிரத திணைக்கள சேவையாளர்களில் 394 பேர் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ளார்கள்.*

*இவர்களில் பெரும்பாலானோர் தற்போது சேவையில் இல்லை, ஒருசிலர் மரணமடைந்து விட்டனர். ஏனையோர் சேவையில் உள்ளார்கள்.*

*சட்டவிரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ள காணிகளை மீண்டும் அரசுடமையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க சட்டமாதிபர் திணைக்களத்தில் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளில் தற்காலிகமாக வாழ்பவர்கள் புகையிரத திணைக்களத்திற்கு வரி செலுத்துகிறார்கள்.*

*ஒருசிலர் வரி செலுத்துவதில்லை. ஒருசில பகுதிகளில் வாழ்பவர்கள் பலவந்தமான முறையில் புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் இதர நடவடிக்கைகளில் ஈடுப்படுகிறார்கள்.*

*புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணியை நீண்டகால குத்தகைக்கு வழங்க முடியாது. ஐந்து வருடங்களுக்கு மாத்திரம் காணியை குத்தகைக்கு வழங்கும் நிபந்தனை அடிப்படையில் வழங்கும் அதிகாரம் புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளருக்கு உண்டு.*

*பிரித்தானியர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டம் புகையிரத சேவையில் இன்றும் வழக்கில் உள்ளது. புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான காணிக்குள் அனுமதி இன்றி உட்பிரவேசிப்பது. புகையிரத தண்டவாளங்களில் அனுமதியின்றி நடப்பது தண்டனைக்கு உரிய குற்றம் என்ற கடுமையான சட்டங்கள் காணப்படுகிறது.*

*புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான வளங்களை பாதுகாக்க 2018ஆம் ஆண்டு முதல் பல்வேறு தரப்பினரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)*

# தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னாரில் கட்டுப்பணம்!

*மன்னார், ஜன. 19*

*நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்துக்கான கட்டுப்பணத்தை மூன்று அரசியல் கட்சிகள் நேற்று புதன்கிழமை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.*

*ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இம்முறை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியென்ற பெயரில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். அவர்கள் நேற்று கட்டுப்பணம் செலுத்தினர்.*

*ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகளும் நேற்று கட்டுப்பணத்தை செலுத்தினர். (ஐ)*

# தேங்காய் விழுந்ததில் அராலியில் ஒருவர் பலி!

*யாழ்ப்பாணம், ஜன. 19*

*தென்னைமரத்தின்கீழ் படுத்து ஓய்வெடுத்தவரின் மீது தேங்காய் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.*

*அராலி மத்தியை சேர்ந்த சிவானந்தன் கஜானன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.*

*சாரதியான இவர் வாகனத்தை நிறுத்திவிட்டு தென்னை மரத்தின் கீழ் படுத்திருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இதன்போது அவரின் நெஞ்சு பகுதி மீது தேங்காய் விழுந்தது.*

*நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டவர் வழியிலேயே உயிரிழந்தார்.*

*பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றது. (ஐ)*

# கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 19*

*கொக்குவில் - தாவடி வடக்கு பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.*

*நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் 86 வயதுடைய மாணிக்கம் வேலாயுதபிள்ளை என அறியவந்துள்ளது.*

*சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான மேலதிக விசாரணையிணை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

மற்றவர்கள் வேலையில் தலையிட்டு ஆலோசனைகள் கூற வேண்டாம். அதனால் சங்கடம் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி உண்டாகும்.

**இடபம்**

நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். உங்கள் முயற்சி லாபமாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும் சவாலான வேலைகளையும் சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்**

நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். எதிரிகள் உங்களிடம் சரணடைவர். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடங்களை சமாளித்து நன்மை காண்பீர்கள். உங்கள் திறமை வெளிப்படும்.

**கடகம்**

பிள்ளைகள் நலன் குறித்த முயற்சியில் இறங்குவீர்கள். நிதிநிலை உங்களுக்கு சாதகமாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். யோகமான நாள். மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்**

திடீர் பயணமும் சங்கடமும் உண்டாகும் என்றாலும், அதனால் லாப நிலை ஏற்படும். நீங்கள் சந்திக்க நினைத்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நண்பரிடம் உண்டான பிரச்னைகள் தீரும்.

**கன்னி**

எதிர்கால வாழ்க்கையை நினைத்து தைரியமான ஒரு முடிவை எடுப்பீர்கள். புதிய வரன் தேடி வரும். அரசு வழியில் நீங்கள் எதிர்பார்த்த லாபம் உண்டு. உங்கள் திறமை வெளிப்படும்.

**துலாம்**

இழுபறியாக இருந்த வேலை முடியும். கணவன் மனைவி இடையே இருந்த பிரச்னை தீரும். தொழிலில் எதிர்பார்த்த வருவாய் உண்டாகும். உறவினர்களால் ஆதாயம் அடைவீர்கள்.

**விருட்சிகம்**

எளிதாக முடிய வேண்டிய வேலைகளையும் போராடி முடிக்க வேண்டியதாக இருக்கும். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் தாமதம் உண்டாகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**தனுசு**

அலைச்சல் அதிகரிக்கும். நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும். நிதானம் தேவை. மறைமுக பிரச்னைகள் தொல்லைகளை ஏற்படுத்தும். எதிர்பார்த்தவற்றில் தடைகள் உண்டாகும்.

**மகரம்**

விவேகத்துடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வரவினை வைத்து பழைய கடன்களை அடைப்பீர்கள். உங்கள் செயல்கள் வெற்றியை ஏற்படுத்தும்.

**கும்பம்**


வியாபாரத்தில் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வீர்கள். உங்கள் முயற்சி லாபத்தை உண்டாக்கும். எதிர்பார்த்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மீனம்**

வராமல் தடைபட்டிருந்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். குடும்ப பிரச்னை தீரும். வியாபாரத்தில் ஏற்பட்ட தேக்க நிலை விலகும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவடைவீர்கள்.

# வரலாற்று பண்பாட்டு சூழலில் தமிழகம் என்பதே பொருத்தம்!

## தமிழக ஆளுநர் ரவி விளக்கம்



சென்னை, ஜன. 19

தமிழகம், தமிழ்நாடு சர்ச்சை தொடர்பாக ஆளுநர் ஆர். என். ரவி விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2023 ஜனவரி 4ஆம் திகதி அன்று ஆளுநர் மாளிகையில் சமீபத்தில் நிறைவடைந்த காசியுடன் தமிழ் மக்களின் பழமையான கலாசார தொடர்பை கொண்டாடும் ஒரு மாத காசி தமிழ் சங்கமம் விழாவில் பங்கேற்ற தன்னார்வ தொண்டர்களை பாராட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் வரலாற்றுப் பண்பாடு பற்றி பேசும் போது, காசி மற்றும் தமிழ் நாட்டுக்கும் இடையே உள்ள தொடர்பை குறிக்க தமிழகம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன். அந்தக் காலத்தில் தமிழ்நாடு என்பது இருக்கவில்லை. எனவே வரலாற்று பண்பாட்டுச் சூழலில், தமிழகம் என்பது மிகவும் பொருத்தமான வெளிப்பாடு என்ற கண்ணோட்டத்தில் குறிப்பிட்டேன்.

எனது கண்ணோட்டத்தை தமிழ்நாட்டின் பெயரை மாற்றுவதற்கான பரிந்துரை போல பொருள் கொள்வதோ, அனுமானம் செய்து கொள்வதோ தவறானது மற்றும் யதார்த்தத்துக்கு புறம்பானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பேச்சு அடிப்படை புரியாமல், ஆளுநர் தமிழ்நாட்டின் பெயரை மாற்றுவதற்கான பரிந்துரை எனும் வாதங்களை விவாதப் பொருளாகி இருக்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்த விளக்கம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பொங்கல் காலத்தில் ரூ. 3,825 கோடிக்கு குடித்து தீர்த்த தமிழக பெருங்குடிகள்!

சென்னை, ஜன. 19

மதுக் கடைகளில் தினமும் சராசரியாக ரூ.150 கோடிக்கு மதுபானங்கள் விற்பனையாகி வருகின்றன. இது சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் அதிகரித்துக் காணப்படும்.

அதேபோல், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகை நாட்களில் மதுபான விற்பனை பலமடங்கு அதிகரிப்பது வழக்கம்.

இந்நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த ஜன.14 முதல் 17ஆம் திகதி வரை (திருவள்ளுவர் தினம் விடுமுறை) 3 நாட்களில் மது கடைகளில் ரூ. 850 கோடிக்கும் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 3,825 கோடி ரூபாய்) அதிகமாக மது பானங்கள் விற்பனையாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

போகி பண்டிகையான 14ஆம் திகதி ரூ.250 கோடி, பொங்கல் தினத்தன்று ரூ.350 கோடி, காணும் பொங்கலான நேற்றுமுன்தினம் ரூ.250 கோடிக்கும் அதிகமாக விற்பனையானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

# ஒரே நாடு ஒரே தேர்தல் தி. மு. க. கடும் எதிர்ப்பு

சென்னை, ஜன. 19

'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை 2024இல் கொண்டுவர மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்துள்ள நிலையில் தி. மு. க. கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றம் மற்றும் மாநிலங்களின் சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் வகையில் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. 2024 பாராளுமன்ற மக்களவைத் தேர்தலிலேயே இத்திட்டத்தை அமுல்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இத்திட்டத்துக்கு பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில், தமிழகத்தில் எதிர்க்கட்சியான அ. தி. மு. க. ஆதரவு தெரிவித்துள்ளது. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' அரசின் செலவை குறைக்குமென அ. தி. மு. க. தரப்பில் சொல்லப்படுகிறது. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்துக்கு ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்து வந்த திமுக, தனது கருத்தை டில்லியில் உள்ள சட்ட ஆணையத்தில் பதிவு செய்துள்ளது.

தி. மு. க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தை, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வில்சன், சட்ட ஆணையத்தில் நேரடியாக அளித்தார். அதில் கூறியிருப்பதாவது.

1951 முதல் 1967ஆம் ஆண்டு வரை பாராளுமன்றம், சட்டப்பேரவைக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றது. பின்னர், சில மாநிலங்களில் ஆட்சிக்காலம் முடியும் முன்பே அரசு கலைக்கப்பட்டதால் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் பாராளுமன்ற, சட்டப்பேரவை தேர்தலை நடத்த முடியவில்லை. மேலும், 6, 7, 9, 11, 12 மற்றும் 13ஆவது மக்களவை முன்கூட்டியே கலைக்கப்பட்டதால் தொடர்ந்து ஒரே நேரத்தில் பாராளுமன்றத்துக்கும், சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை.

அரசியலமைப்பு சட்டத்தின்படி நாடாளுமன்ற மக்களவை மற்றும் சட்டப்பேரவையின் காலம் 5 ஆண்டுகள் ஆகும். அதேநேரம், அமைச்சரவை முடிவு அடிப்படையிலும், அவசர பிரகடனத்தைச் சுட்டிக்காட்டி ஆளுநரும் ஆட்சியைக் கலைக்கலாம். ஓர் ஆட்சி என்னென்ன காரணங்களுக்காக கலைக்கப்படலாம் என எஸ். ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை காரணம் காட்டி ஒரு ஆட்சியைக் கலைக்க முடியாது. 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கலைப்பது என்பது மக்கள் எண்ணத்துக்கு எதிரானது.

இந்த திட்டத்துக்காக அரசை கலைத்தால் தேர்தலுக்காக செலவிடப்பட்ட மக்களின் வரிப்பணம் வீணாகும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது நடைமுறைக்கு ஒத்துவராத திட்டம் ஆகும். எனவே, இந்த திட்டத்தைக் கைவிட வேண்டும் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் நடத்தினால் அந்த சுமையை மக்களே தாங்கிக் கொள்ள நேரிடும்!

## கூறுகின்றார் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்



**கொழும்பு, ஜன. 19**

**“தேர்தலுக்காக 12 பில்லியன் ரூபா செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நம் நாட்டின் வருமானம் 100 என்றால் செலவு 300 ஆகிவிட்டது. மீதி இருநூறை கடன் வாங்கியோ அல்லது பணத்தை அச்சடித்தோ நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். தேர்தல் நடந்தால் பண வீக்கம் அதிகரிக்கும். வரி வருமானத்தில் இருந்து எடுத்தால் அது மக்களின் உணவு வேளையையே பாதிக்கும்.”**

- இவ்வாறு தெரிவித்தார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நடந்தால் பண வீக்கம் அதிகரிக்கும். வரி வருமானத்தில் இருந்து எடுத்தால் அது மக்களின் உணவு வேளையையே பாதிக்கும். இப்படிப்பட்ட நேரத்தில், பணம் அச்சடித்து, அதிகார மாற்றம் இல்லாத உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால், அது உலக சாதனையாக இருக்கும். ஜனநாயகம் முக்கியம்தான். திறைசேரியின் பிரதிநிதி என்ற முறையில் நான் இதனைக் கூறுகின்றேன். தேர்தலை நடத்த இது சரியான தருணமா என்று மக்களிடம் கேட்கிறேன் - என்றார். (அ)

# 47,353 சுற்றுலாப் பயணிகள் 17 நாள்களில் இலங்கைக்கு

*கொழும்பு, ஜன. 19*

*இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47 ஆயிரத்து 353 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.*

*இலங்கை சுற்றுலா அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்தார்.*

*கடந்த முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*குறித்த காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.*

*இதற்கமைய ரஷ்யாவிலிருந்து 12 ஆயிரத்து 64 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.*

*மேலும், இந்தியாவில் இருந்து 5 ஆயிரத்து 838 பேரும், ஜேர்மனியில் இருந்து 3 ஆயிரத்து 945 பேரும், பிரித்தானியாவிலிருந்து 3 ஆயிரத்து 862 பேரும், பிரான்சில் இருந்து 2 ஆயிரத்து 241 பேரும் இலங்கைக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*அத்துடன், இம்மாதம் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)*

# அமெ.தூதுவரின் கருத்தை கண்டித்தார் சீன பிரதிநிதி

*கொழும்பு, ஜன. 19*

*கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்களுக்கு இலங்கையின் சீனத்தூதரகம் கண்டனங்களை வெளியிட்டுள்ளது.*

*ஐக்கிய இராச்சியத்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு அமெரிக்கத் தூதுவர் அளித்த நேர்காணலின்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தையில் சீனா, வெற்றியை தடுப்பதாக குற்றம் சுமத்தியிருந்தார்.*

*இந்த கருத்தை கண்டித்துள்ள சீனத் தூதரகம், சீனா, என்ற இழிவான மந்திரத்தை அமெரிக்கத் தூதுவர் உச்சரிப்பதாக குறிப்பிட்டுள்ளது.*

*இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் சீனா சீர்குலைப்பவர் என்று அமெரிக்க தூதுவர் கூறியிருப்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று சீன தூதரகம் தெரிவித்துள்ளது.*

*இவ்வாறான விரிவுரைகளுக்கு செல்லும் முன்னர், அமெரிக்கா தம்மைத் தாமே சில கேள்விகள் கேட்டுக்கொள்ளவேண்டும்.*

*சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கை முடிவுகளில் வீட்டோ அதிகாரத்தை கொண்டிக்கும் நாடு எது?, இலங்கையின் மொத்தக்கடன்களில் 40 வீதமான அதிக வட்டிவீதங்களுடன் கடனளிப்பவர்கள் எங்குள்ளவர்கள்?, அமெரிக்க நீதிமன்றில் இலங்கையின் இயல்பு நிலைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது யார் என்ற கேள்விகளை அமெரிக்க தூதுவர் தம்மை தாமே கேட்டுக் கொள்ளவேண்டும் என்று சீனத் தூதரகம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*இலங்கை மக்களுக்கு ஏற்கனவே 10000 மெற்றிக் தொன் அரிசி, 9000 லீற்றர் டீசல், 5 பில்லியன் மருந்துகள் மற்றும் 3 மில்லியன் பெறுமதியான பாடசாலை சீருடைப் பொருட்களை சீனா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.*

*எனினும், இலங்கை மக்களுக்காக அமெரிக்கா எப்படி நடந்துகொண்டது என்பதையும், அமெரிக்க உதவியின் அரசியல் முன்நிபந்தனைகள் என்ன என்றும் இலங்கை மக்கள் கேள்வி எழுப்பலாம் என்றும் சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.*

*எனவே, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடுகளை விதைப்பதற்குப் பதிலாக, இலங்கைக்காக, சர்வதேச நாணய நிதியத்தில் அமெரிக்கா ஏன் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் சீனத் தூதரகம் கேள்வி எழுப்பியுள்ளது. (அ)*

# உண்டியல் குலுக்கிப் பணம் சேகரித்து மைத்திரியிடம் ஒப்படைத்த கலைஞர்!



*கொழும்பு, ஜன. 19*

*ஏப்ரல் 21 தாக்குதல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்டுள்ள 10 கோடி ரூபா நட்டஈட்டு தொகையை செலுத்துவதற்காக சகோதர மொழி கலைஞரான சுதத்த திலகசிறி நேற்று முன் தினம் கொழும்பு - கோட்டையில் உண்டியலை குலுக்கி பணம் சேகரித்தார்.*

*அதன்போது, திரட்டப்பட்ட 1810 ரூபா பணத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் கையளித்தார்.*

*நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 10 கோடி ரூபா நட்டஈட்டை செலுத்தும் அளவுக்கு தன்னிடம் சொத்துக்கள் இல்லை எனவும், அதனால் பணத்தை தனது நண்பர்களிடம் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டிருந்தார். (அ)*

# ருமேனியாவில் தொழில் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

*கொழும்பு, ஜன. 19*

*ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி இலங்கையர்களிடம் இருந்து சட்டவிரோதமாக பணம் பெற்ற இருவர் மாரவில பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.*


*சந்தேகநபர்கள் வசமிருந்து 38 கடவுச்சீட்டுகள் மற்றும் வெளிநாடு செல்வதற்காக பலர் சமர்ப்பித்திருந்த விண்ணப்பப் படிவங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.*

*சந்கேநபர்கள் இருவரையும் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)*



# கொண்டாடும் அளவுக்கு பெரிய சுதந்திரம் இல்லை

## சபையில் கூறினார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, ஜன. 19

தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு செலவாகும் 200 மில்லியன் ரூபா பணத்தை அர்த்தமுள்ள ஒன்றுக்கு பயன்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் பாராளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

இராணுவ அணி வகுப்பை நடத்தி, பாரிய வெடிகளை வெடிக்க செய்து, கொண்டாடும் அளவுக்கு சுதந்திரம் இருக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமரிடம் கேள்வி ஒன்றை முன்வைத்தபோதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு தற்போது மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

குறிப்பாக கிராம மற்றும் நகர புற வறிய மக்களுக்கு அன்றாடம் உணவை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை இருக்கின்றது. உணவு சாப்பிடாத காரணத்தினால், பாடசாலை நேரத்தில் சில பிள்ளைகள் மயக்கமுற்று விழுந்துள்ள சம்பவங்கள் நடந்துள்ளன.

எடை குறைந்த பிள்ளைகள் அதிக அளவில் பிறப்பதாக வைத்தியசாலைகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அரச ஊழியர்கள் உட்பட அனைத்து மக்களும் குறைந்த வருமானத்தில், வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள சூழலில் வாழ்ந்து வருகின்றனர். வர்த்தக துறை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இப்படியான சந்தர்ப்பத்தில் அதிகளவில் பணத்தை செலவிட்டு, சுதந்திர தினக் கொண்டாடத்தை நடத்துவது பொருத்தமற்றது.

இராணுவ அணி வகுப்பை நடத்தி, பாரிய வெடிகளை வெடிக்க செய்து, கொண்டாடும் அளவுக்கு சுதந்திரம் இருக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. 200 மில்லியன் ரூபா என பிரதமரின் பதிலாக இருக்கலாம்.

எனினும் வெடி மருந்து, பாதுகாப்பு அமைச்சு ஆகும் செலவுகளை எடுத்துக்கொண்டால், 200 மில்லியன் ரூபா அல்ல அதனை விட செலவாகும்.

நாட்டில் தற்போது கொண்டாடும் அளவுக்கு சுதந்திரமும் இல்லை. நாட்டு மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அறிவிப்பு அல்லது வேலைத்திட்டம் ஒன்றை அறிவிக்க வேண்டுமே அன்றி நிதியை செலவிடுவது கேலிக்குரிய வேலை - என்றார். (அ)



# யாழ். புதிய அரசாங்க அதிபராக கடமையேற்றார் சிவபாலசுந்தரன்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்.மாவட்ட புதிய அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்று புதன்கிழமை காலை 10.20 மணியளவில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப் பேற்றார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரனை நியமனம் செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியது.

இவருக்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் தினேஷ் குணவர்தனவால் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்று காலை சர்வமதத் தலைவர்களிடம் ஆசி பெற்ற பின்னர் யாழ். மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கு முன் இலங்கை நிர்வாக சேவையின் (விசேட தர) மூத்த அதிகாரியான இவர், மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா போன்ற இடங்களில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி, 2013ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலக செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளராக, மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளராக கடமையாற்றி நிறைவாக மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வித்தியாசமான வியூகங்கள் வகுத்துப் போட்டியிடுவோம்

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 19

ஐக்கிய மக்கள் சக்தியோடு சேர்ந்தும், தனித்தும் பல மாவட்டங்களில் வித்தியாசமான வியூகங்களை வகுத்து போட்டியிடுவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புத்தளத்தில் தெரிவித்தார்.

அங்கு புத்தளம்,கற்பிட்டி, வவுனியா,மன்னார் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுடைய நேசக் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோடு சில மாவட்டங்களில் நாம் சேர்ந்து போட்டியிடுகின்றோம். கடந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசிய கட்சியில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு மீண்டும் வேட்பாளர் ஆகும் வாய்ப்பை ஐக்கிய மக்கள் சக்தி தருகின்றபோது அவர்களை அங்கே நிறுத்துகின்றோம். அவ்வாறு இல்லாமல் சில இடங்களில் சர்ச்சைகள் ஏற்படுகின்றபோது தவிர்க்க முடியாமல் தனித்து போட்டியிடுகின்ற நிலைப்பாடுகள் பல இடங்களில் எங்களுக்கு ஏற்பட்டுள்ளன.



இவற்றை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம். எங்களை பொறுத்தமட்டில் தனித்து போட்டியிடுவதில் கட்சிக்கு மிகுந்த அனுகூலங்கள் இருக்கின்றன. இந்த தேர்தலில் தனித்தோ, சேர்ந்தோ போட்டியிடுவதில் கட்சிக்கு என்ன அனுகூலம் என்பதை அடிப்படையாக வைத்து சில முடிவுகளுக்கு வந்திருக்கின்றோம்.

அதன் அடிப்படையில்தான் புத்தளம் மாநகர சபையில் தனித்து போட்டியிடுவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன - என்றார்.

(அ-06)

# சுதந்திர தினச் செலவுகள் எதிர்காலத்துக்கான முதலீடு

## சபையில் கூறினார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன. 19

சுதந்திர தினக் கொண்டாட்ச் செலவுகள் எதிர்காலத்துக்கான முதலீடாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக அரசாங்கம் அதிகளவு செலவு செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று சுதந்திரத்துக்குப் பின்னர் எமக்கு 75 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. சுதந்திரம் அடைந்து 100 வருடங்கள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் நாட்டின் மறுசீரமைப்புக்கு அவசியமான பல நிறுவனங்களை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்.

அதற்கமைய வரலாறு தொடர் பிலான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

வரலாற்றை மறந்துவிட்டோம் என்பதே எங்கள் மீது இப்போதுள்ள பாரிய குற்றச்சாட்டு. அப்படியானால் அவ்வாறானதொரு நிறுவனத்தை ஆரம்பித்தே ஆக வேண்டும்.

அத்துடன், பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனமொன்றை நிறுவவுள்ளோம்- என்றார்.

(அ)

# பாணந்துறையில் 2 வீடுகள் தீக்கிரை

கொழும்பு, ஜன. 19

பாணந்துறை பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக மோதறையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் வீடு ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மொரட்டுவை நகர சபை தீயணைப்புப் பிரிவினர் தீ மேலும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மோதறையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்குச் சென்ற இனந்தெரியாத சிலர் அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது மாடியில் உள்ள வீட்டுக்கு தீ வைத்து எரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ)

# கொழும்பில் அதிகளவில் டெங்கு நோயாளர் பதிவு



கொழும்பு, ஜன. 19

கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் இம்மாதம் 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 2,030 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 417 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 257 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 123 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 107 பேரும், யாழ்ப்பாணத்தில் 103 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மேலும், இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் மட்டும் சுமார் 4,172 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கறி ஏற்றி சென்ற வாகனம் தீப்பற்றியது!

## வல்லைப் பாலத்தில் சம்பவம்

வடமராட்சி, ஜன. 19

யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறி வகைகளை ஏற்றிக் கொண்டு வடமராட்சி நோக்கி சென்றுகொண்டிருந்த வடி ரக வாகனம் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்து நசமானது.

நேற்று புதன்கிழமை காலை 8 மணியளவில் வல்லைப் பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

தீ விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# தொழில் பெற்றுத்தருவதாக கூறி பணம் பெற்ற இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 19

ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி இலங்கையர்களிடம் இருந்து சட்ட விரோதமாக பணம் பெற்ற இருவர் மாரவில பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்து 38 கடவுச்சீட்டுகள் மற்றும் வெளிநாடு செல்வதற்காக பலர் சமர்ப்பித்திருந்த விண்ணப்பப் படிவங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.

சந்கேநபர்கள் இருவரையும் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மின்சார சபை கடனை செலுத்தாவிடில் சுத்திகரிப்பு நிலையத்தை மூட நேரிடும்

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

இலங்கை மின்சார சபை வழங்கவேண்டிய 108 பில்லியன் ரூபாவை வழங்கவில்லையாயின், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நடத்த முடியாத நிலை ஏற்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்சம் தற்போது பெற்றுக்கொள்ளும் எரி எண்ணெய், நெப்டாவிற்கான கட்டணத்தையேனும் செலுத்த முன்வரவேண்டும் என கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

செலவீனங்களை கட்டுப்படுத்துவதற்காக மின் கட்டணத்தை அதிகரிப்பது அவசியம் என மின்சார சபை அறிவித்துள்ளதன் பின்புலத்திலேயே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபைக்கு வழங்கிய கடனை கோரியுள்ளது.

ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை இடைக்கால மின் கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சார சபை கடந்த வாரம் அறிவித்திருந்தாலும் அந்த தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெறாமையினால், அமைச்சரவை அனுமதியை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் என்.எஸ்.இலங்கக்கோன் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானித்துள்ள விலைத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அமைச்சரவை செயலாளருக்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

## உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 19

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று புதன்கிழமை உயர் நீதிமன்றத்துக்கு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் பணி நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய நேற்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக, 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 மன்றங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முதல் ஆரம்பிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழு கடந்த 4ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தலாய் லாமாவை அழைத்தமைக்கு அதிருப்தி வெளியிட்ட சீன தூதரகம்!

கொழும்பு, ஜன. 19

திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய்லாமா இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற பௌத்த பிக்குகளின் கோரிக்கைக்கு, இலங்கைக்கான சீன தூதரகம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மல்வத்துபீட மஹாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை, கண்டியில் சந்தித்து கலந்துரையாடியபோதே, இலங்கைக்கான சீன தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஹவெய் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது கருத்துரைத்த இலங்கைக்கான சீன தூதரகத்தின் பொறுப்பதிகாரி, தலாய் லாமா கூறுவதை போல் ஓர் “எளிய துறவி“ அல்லர். 1951 இல் சீனா கையகப்படுத்தப்படுவதற்கு முன்னர் திபெத்தில் இருந்த நிலப் பிரபுத்துவ மற்றும் இறையாட்சி அமைப்பின் தலைவராகவும் பிரிவினைவாதியாகவும் செயற்பட்டவர் என குறிப்பிட்டார்.

அவர் நீண்ட காலமாக சீனாவுக்கு எதிரான பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு, சீனாவில் இருந்து திபெத்தை பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஒரு மதப் பிரமுகராகராவார் என தெரிவித்தார்.

தலாய் லாமா காலத்தில் சுமார் 1 மில்லியன் மக்கள் திபெத்தின் சனத்தொகையில் 95 சதவீதமானோர் அடிமைகளாக இருந்தனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், திபெத்திய மக்கள் தற்போது 31 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒரு வளமான பொருளாதாரத்தை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் அங்கு மதச் சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர். இந்த சூழலில் திபத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவேண்டும் என விடுக்கப்பட்ட அழைப்பானது இரு தரப்பு உறவுகளை பாதிக்கும் வகையில் அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த, மல்வத்துபிட மகாநாயக்க தேரர், இலங்கையின் நெருங்கிய நட்பு நாடான சீனா, இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட்-19 உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது உதவி வழங்குகின்றது. அதற்கு, இலங்கையர்கள் சீனாவுக்கு எப்போதும் கடமைப் பட்டுள்ளோம் - என கூறினார். (அ)

## இன்று நடைபெறவுள்ள தெரிவின்போது

# தமிழரசு முதல்வர் வேட்பாளராக களமிறக்கப்படுகிறார் ஆனோல்ட்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்.மாநகர சபையில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள முதல்வர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக இம்மானுவேல் ஆனோல்ட்டைக் களமிறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை செயலகத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர முதல்வரை தெரிவு செய்வதற்கான தெரிவு இன்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக யாரை நிறுத்துவது என்பது தொடர் பாக நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டம் இணக்கமின்றி முடிவுக்கு வந்தநிலையில் - நேற்று காலை 9 மணிக்கு மீண் டும் கூட்டத்தைக் கூட்டி முதல்வர் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் வேட்பாளரை தெரிவு செய்வதில் தமிழரசு கட்சிக்குள் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன சொலமன் சிறில், இம்மானுவேல் ஆனோல்ட் ஆகியோரின் பெயர்கள் முதல்வர் தெரிவுக்கு முன்வைக்கப்பட்ட நிலையில் இம்மானுவேல் ஆனோல்ட் முதல்வர் தெரிவுக்கு நிறுத்த தீர்மானிக்கப்பட்டது. (அ)

# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசாரணா: ஈழநாடு

# சீன மக்கள் தொகை 60 ஆண்டுகளில் முதன் முறையாக சரிவு - என்ன சிக்கல்?


**கெல்லி நாங்**

சீன மக்கள் தொகை கடந்த 60 ஆண்டுகளில் முதன் முறையாக சரிவு கண்டுள்ளது. தேசிய குழந்தை பிறப்பு விகிதம் இதுவரை இல்லாத வகையில் ஆயிரம் பேருக்கு - 6.77ஆக குறைந்துள்ளது.

சீனாவின் மக்கள் தொகை 2022ஆம் ஆண்டு 141.18 கோடி. முந்தைய 2021 ஆம் ஆண்டில் இருந்து இது 8.5 லட்சம் குறைவு ஆகும்.

மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர சீன அரசு கடைபிடித்த கொள்கைகளால் அங்கு குழந்தை பிறப்பு விகிதம் பல ஆண்டுகளாகவே குறைந்து வந்தது.

ஆனால், “ஒரு குடும்பம் ஒரு குழந்தை” கொள்கையை துறந்த 7 ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் தொகை குறையும் யுகத்தில் சீனா நுழைந்திருப்பதாக அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.



2021ஆம் ஆண்டு 7.52 சதவீத மாக இருந்த குழந்தை பிறப்பு விகித மும் 2022ஆம் ஆண்டில் வீழ்ச்சி கண்டிருப்பதாக சீன தேசிய புள்ளியியல் கழகம் செவ்வாயன்று வெளியிட்ட புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

ஒப்பீட்டளவில், 2021ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆயிரம் பேருக்கு 11.06 குழந்தைகளும், ஐக்கிய ராஜ்யத்தில் 10.08 குழந்தைகளும் பிறந்தன. மக்கள் தொகை அடிப்படையில் சீனாவை விரை வில் விஞ்சும் என்று கணிக்கப்பட்டுள்ள இந்தியாவில் அதே காலகட்டத்தில் 16.42-ஆக இருந்தது.

முன்னதாக, சீன அரசு அளித்த புள்ளிவிவரம் மக்கள் தொகை நெருக்கடி வரக்கூடும் என்று அறிவித்தது. நீண்ட கால அடிப்படையில் நோக்கின், சீனாவின் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையும், மூத்தோர் எண்ணிக்கை உயரும் என்பதால் சுகாதாரம், மருத்துவம் போன்ற பிற சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கு சுமை அதிகரிக்கும்.

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரம் 2021ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, பல தசாப்தங்களில் மிகக் குறைவான மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை சீனா கொண்டிருந்தது. ஜப்பான், தென் கொரியா போன்ற கிழக்கு ஆசிய நாடுகளிலும் மக்கள் தொகை சரிவு, வயது மூத்தோர் அதிகரிப்பு போன்ற நெருக்கடி நிலவுகிறது.

“இந்த போக்கு தொடரும், கொரோனா பேரிடருக்குப் பிறகு மேலும் மோசமடையக் கூடும்,” என்கி றார் பொருளாதார புலனாய்வுப் பிரிவின் முதன்மையான பொருளாதார நிபுணர் யூ சூ. 2023-ம் ஆண்டில் சீன மக்கள் தொகை மேலும் சரிவை சந்திக்கும் என்று நம்பும் நிபுணர்களுள் அவரும் ஒருவர்.



“இளைஞர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை பிரச்னையும், எதிர்பார்த்த வருவாய் கிடைக்காததும் திருமணம், குழந்தை போன்ற எதிர்கால திட்டங்களை தள்ளிப் போடுகிறது. இதனால் குழந்தை பிறப்பும் குறைகிறது,” என்று அவர் மேலும் கூறுகிறார்.

கொரோனா எதிரொலியாக, முந்தைய ஆண்டுகளைக் காட்டி லும் 2023ஆம் ஆண்டில் சீனா வில் உயிரிழப்பு விகிதமும் அதிகமாக இருக்கும் என்று அவர் கூறுகிறார். கடந்த மாதம் ஜீரோ கோவிட் பாலிசி கொள்கையை சீனா கைவிட்ட பிறகு அங்கு கொரோனா தொற்று வேகமாக அதிகரித்துள்ளது.

மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்த 1979ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட, சர்ச்சைக்குரிய “ஒரு குடும்பம் ஒரு குழந்தை” திட்டமே சீனாவின் தற்போதைய மக்கள் தொகை சரியும் போக்கிற்கு காரணம். இந்த கொள்கையை மீறும் குடும்பங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது் உச்சக்கட்டமாக வேலையும் பறிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக, பெண் குழந்தையை விட ஆண் குழந்தையையே அதிகம் விரும்பும் சீன கலாசாரத்தில், இதன் எதிரொலியாக கருக்கலைப்புகள் அதிக அளவில் நடந்தன. இதனால், 1980-களில் ஆண் - பெண் விகிதம் மோசமாகத் தொடங்கியது.

“ஒரு குடும்பம் ஒரு குழந்தை” கொள்கை 2016ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டு, தம்பதியர் 2 குழந்தைகள் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். சமீப ஆண்டுகளில், குழந்தை பிறப்பு விகிதம் குறையும் போக்கை கட்டுப்படுத்தும் பொருட்டு, ஒன்றுக்கு மேல் குழந்தை பெற்றால் வரிச்சலுகைகள், பேறுகால மருத்துவ பராமரிப்பு மற்றும் ஊக்கத்தொகை வழங்கவும் சீன அரசு முன்வந்தது.

ஆனால், சீன அரசின் முயற்சி பலன் தரவில்லை. இதனால், குழந்தை பிறப்பு விகிதம் அதிகரிக்கவில்லை. குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்கப்படுத்தும் அரசின் அறிவிப்புகளில், குழந்தை பராமரிப்பு உள்ளிட்ட வேலைக்குச் செல்லும் பெண்களின் சுமையை குறைக்கவும், குழந்தையின் பள்ளிக் கல்விக்கு உதவவும் எந்த நடவடிக்கையும் இல்லை என்பதே காரணம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



2022, அக்டோபரில் குழந்தை பிறப்பை அதிகரிக்கச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும் என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் அறிவித்தார். பெய்ஜிங்கில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற கூட்டத்தில், நாட்டின் மக்கள் தொகை சராசரியை இளமையாக வைத்திருக்க முன்னெச்சரிக்கையாக தேசிய அளவிலான உத்தியை தனது அரசு கடைபிடிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

குழந்தை பிறப்பை ஊக்கப்படுத்துவது மட்டுமின்றி, வீடுகளிலும், பணியிடங்களிலும் பாலின சமத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்று குடும்பம் மற்றும் மக்கள் தொகை ஆராய்ச்சிக்கான சிங்கப்பூர் மையத்தின் தேசிய பல்கலைக் கழக இயக்குநர் பஸ்ஸராவன் தீராவிச்சிட்செய்னன் தெரிவித்துள்ளார்.

ஸ்காண்டிநேவியன் நாடுகளில் அதுபோன்ற முயற்சிகள் குழந்தைப் பேற்றை அதிகரிப்பதில் நல்ல பலனை தந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மக்கள் தொகை நெருக்கடியை சமாளிக்க சீனா ஏராளமான மனித வளத்தையும், நேரத்தையும் கொண்டிருக்கிறது என்பது சிங்கப்பூரின் முன்னாள் தலைமை புள்ளியியலாளர் பால் செயுங் கூற்று.

“உடனடியாக ஒரு பேரழிவை சந்திக்கும் நிலையில் சீனா இல்லை,” என்று அவர் கூறுகிறார்.

குழந்தைப் பிறப்பை அதிகரிப்பது மட்டுமே சீனாவின் பொருளார வளர்ச்சி வேகக் குறைவுக்கு பின்னால் உள்ள பிரச்னைகளை தீர்த்து விடாது என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

“குழந்தைப் பேற்றை ஊக்கப்படுத்துவது உற்பத்தியையோ அல்லது உள்நாட்டு நுகர்வையோ கூடிய விரைவில் எந்த வகையிலும் அதிகரிக்கப் போவதில்லை,” என்கிறார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தி ஹாங்காங் பல்கலைக் கழக பேராசிரியர் ஸ்டூவர்ட் ஹீட்டல்-பாஸ்டென்.

“அமைப்பு ரீதியான பிரச்னைகளை சீனா எவ்வாறு கையாள்கிறது என்பதே மிகவும் முக்கியமானது,” என்பது அவரது கருத்து.



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கைப்பற்றிய ஈழ விடுதலை போராளிகள் - இனி என்னவாகும்?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முழுமையாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் வசமாகியுள்ளது. மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படாத அரசியல் கட்சிகள் மற்றும் போராளிகள் அடங்கிய கூட்டணியாக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிளவுபட்டு, தற்போது விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் கூட்டமைப்பை தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இறுதியாக மூன்று தமிழ் கட்சிகள் இணைந்து செயற்பட்டு வந்தன. இதன்படி, மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கை தமிழரசு கட்சி, செல்வம் அடைகலநாதன் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) மற்றும் சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகிய கட்சிகளே கூட்டமைப்பில் இறுதியாக செயற்பட்டன. இந்த நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கை தமிழரசு கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதை அடுத்து, ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற ஐந்து கட்சிகள், கூட்டமைப்பை தமது வசப்படுத்தியுள்ளனர்.

இதன்படி, சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), செல்வம் அடைகலநாதன் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), கதிர் தலைமையிலான ஜனநாயக போராளிகள் கட்சி, சுரேஷ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் கூட்டமைப்பை தமதாக்கிக் கொண்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புதிதாக இணைந்துக்கொண்ட கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் சின்னமாக வீட்டுச் சின்னத்தில் இதுவரை காலமும் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இனிவரும் காலத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் களமிறங்கவுள்ளது. தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, தாமாகவே அதிலிருந்து வெளியேறியதால், குறித்த கட்சிகள், தமிழ் மக்களின் நலன்களையும், நம்பிக்கையையும் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தம்மைப் பிரகடனப் படுத்திக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளன.

### புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 14 அம்சங்கள்

1. மேற்கூறிய அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும்.

2. மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய செயற்குழு ஒன்று அமைக்கப்படும்.

3. இத்தேசியச் செயற்குழு, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிற்கான முழுமையான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு, அதனை அடைவதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் நெறிமுறைகளையும் வகுத்து செயற்படும்.

4. செயற்குழுவிலும் செயற்குழுவால் அமைக்கப்படும் ஏனைய குழுக்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு சம உரிமைகளும் சம அளவான பிரதிநிதித்துவமும் வழங்கப்படும்.

5. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழுவின் ஏகமனதான முடிவுகளுக்கும் தவறும் பட்சத்தில் அதன் பெரும்பான்மை முடிவுகளுக்கும் அங்கத்துவக் கட்சிகள் கட்டுப்படும்.

6. மேற்கண்ட கட்சிகளையும் தேவையேற்படின் ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட வலுவான கட்டமைப்பாக உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

7. தேர்தல் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற பெயரிலும் அதன் சின்னமான குத்துவிளக்கையும் கொண்டு செயற்படும்.

8. இதற்கான நிரந்தர ஒரு கட்டமைப்பை சாத்தியமான விரைவில் உருவாக்கும்வரை இதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றிலிருந்தும் கட்சித் தலைவர்கள் உட்பட தலா மூவரைக்கொண்ட தேசிய செயற்குழு ஒன்று நிறுவப்படும்.

9. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை நடவடிக்கைகளையும் இந்த செயற்குழுவே வழிநடத்தும்.

10. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளைக் கையாள்வதற்கும், ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய பிற பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் தேவையான நிபுணர் குழுக்களையும் ஏனைய உப செயற்குழுக்களையும் தேவைகருதி தேசிய செயற்குழு நியமித்துக்கொள்ளும்.

11. அங்கத்துவக் கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டாலும் தத்தமது சுயாதீனத் தன்மையையும் தனித்துவத்தையும் பேணிக்கொள்ள உரித்துடையவை.

12. ஒவ்வொரு கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமை அமைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அங்கத்துவக் கட்சிகளையோ அல்லது கூட்டமைப்பின் கொள்கை, வேலைத்திட்டங்களை ஊடகங்களிலோ பொதுமேடைகளிலோ அல்லது சம்பந்தமில்லா தரப்பினரிடமோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ கருத் திடுவது தவிர்க்கப்பட வேண்டும். இவை தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளையும் கண்காணிக்க ஒழுக்காற்றுக் குழு நிறுவப்படும்.



13. ஒரு கட்சியின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி, உறுப்பினர்கள் மற்றொரு கட்சிக்குத் தாவினால் அதனை அங்கத்துவக் கட்சிகள் ஏற்கக்கூடாது.

14. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சி முறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான முழுமையான யாப்பு உருவாகின்றபோது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போது, எப்படி உருவானது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியானது, 2001ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் உருவாக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளும், ஈழ விடுதலைக்காக போராடிய முன்னாளி போராளிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலையீட்டில் இந்த கூட்டமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தி, இந்த கூட்டமைப்பை ஆரம்பித்திருந்தனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு, அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படாமையினால், வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் 2001ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டது.

கூட்டமைப்பின் முதலாவது தேர்தலில், நாடாளுமன்றத்தில் 15 ஆசனங்களை தம்வசப்படுத்திக் கொண்டது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஆரம்ப காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என்ற விமர்சனங்கள் வெளியான நிலையில், கூட்டமைப்பிற்கு முதல் தடவையாக பிளவு வர ஆரம்பித்திருந்தன.

இதையடுத்து, 2004ஆம் ஆண்டு காலப் பகுதியில் கூட்டமைப்பிற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த, தமிழர் விடுதலை கூட்டணி உள்ளிட்ட சிலர், கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தனர்.

அதன்பின்னர், தனது கட்சி சின்னமாக உதய சூரியன் சின்னத்தை பயன்படுத்த, வீ.ஆனந்தசங்கரி நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவை பெற்றுக்கொண்டார்.

இதையடுத்து, இலங்கை தமிழரசு கட்சியின் சின்னமாக வீட்டுச் சின்னத்தை பயன்படுத்துவதற்கான தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 2004ம் ஆண்டு எடுத்திருந்தது.

2004ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 22 ஆசனத்தை தன்வசப்படுத்திக் கொண்டு, மாபெரும் கூட்டமைப்பாக உருவெடுத்தது.

அதன்பின்னரான காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, மேலும் பலர் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தனர்.

இதன்படி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்ட சிலர் கூட்டமைப்பிலிருந்து விலகி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கூட்டணியை ஸ்தாபித்தனர்.

இலங்கையின் முதலாவது வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013ம் ஆண்டு நடத்தப்பட்டது.

இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில், முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் களமிறக்கப்பட்டு, வடக்கில் 38 தொகுதிகளில் 30 தொகுதிகளை தன்வசப்படுத்தி, வடக்கு மாகாண சபை ஆட்சியை கைப்பற்றியது.

வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையை கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட சி.வி.விக்னேஸ்வரன் தனதாக்கிக் கொண்டார்.

2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால



சிறிசேனவிற்கு தேர்தல் காலத்தில் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, 2015ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 16 ஆசனங்களை கைப்பற்றி, நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

### இனி என்ன நடக்கும்?

தமிழித் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்கனவே பிளவுகள் காணப்பட்ட நிலையில், தற்போது முழுமையாக பிளவடைந்துள்ளதாக அரசியல் ஆய்வாளரும், மூத்த பத்திரிகையாளருமான அ.நிக்சன், தெரிவிக்கின்றார்.

தேர்தல் காலங்களில் பிரிந்து, பின்னர் இணைந்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் கூறுகின்றார்.

“இந்த கூட்டமைப்பு, ஏற்கனவே பிரிந்த ஒரு கூட்டமைப்பு. இப்போது முழுமையாக உடைந்துள்ளது. கூட்டமைப்பாக இருந்தும் எந்தவித பயனும் இல்லை. பிரிந்தும் எந்தவித பயனும் இல்லை. புதிய கூட்டமைப்பை உருவாக்கி, எந்த பயனும் வர போவதில்லை. தேர்தலுக்காக பிரிகின்றார்கள், கூடுகின்றார்கள். மீண்டும் இணைய வாய்ப்புள்ளது. இது தமிழ் மக்களின் நலன் சார்ந்த கூட்டணி அல்ல. இது தேர்தலுக்கான கூட்டு. ” என்கிறார் அவர்.

“சேர்வார்கள், உடைவார்கள், சேர்வார்கள், உடைவார்கள். இந்த நிரந்தரமான கூட்டணி அல்ல. தேர்தலில் போட்டியிட்டு, ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்கான முயற்சியே இது. வீ.ஆனந்தசங்கரி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் உள்ளிட்ட பலர் இந்த கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்றார்கள். இது அனைத்தும் தேர்தல் காலப் பகுதிகளிலேயே இடம்பெற்றன.” என அரசியல் ஆய்வாளர் அ.நிக்சன் குறிப்பிடுகின்றார்.

### புதிய கூட்டமைப்பின் பதில்

ஈழ விடுதலைப் போராளிகளுக்கு உரித்தான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தற்போது முழுமையாக ஈழ விடுதலைப் போராளிகள் வசமாகியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணை ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

“தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் போராடினாலும், போராளிகள் அரசியல் நீரோட்டத்திற்குள் செல்வதற்கு இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவைப்பட்டது. ஆகவே, ரணில் விக்ரமசிங்கவின் இந்த சதி முயற்சியை முறியடித்து, விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திய அத்தனை போராளிகளும் ஒரே அணியில் ஒன்று திரண்டு, நாங்கள் எங்கள் மக்களின் விடுதலைக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்போம். எங்கள் மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

ஈழ விடுதலை போராளிகளுக்கு உரித்தானதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக போராளிகளின் வசம் வந்து விட்டது. இலங்கை தமிழரசு கட்சி தேர்தலுக்கு பிறகு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துக்கொள்வதாக பிரசாரம் செய்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், இலங்கை தமிழரசு கட்சியை தாம் ஒரு காலமும் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ள போவதில்லை” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணை ஊடகப் பேச்சாளர் க.துளசி குறிப்பிடுகின்றார்.

(பிபிசி)

# புனர்வாழ்வு சட்ட மூலத்தில் அரசியல் நோக்கம் கிடையாது!

## வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜன. 19

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை நல்வழிப் படுத்தும் வகையில் புனர்வாழ்வு பணியக சட்டமூலம் கொண்டுவரப் படவுள்ளது. இதில் எந்த அரசியல் நோக்கமும் கிடையாது என வெளி விவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாத்தில் உரை யாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போதைப் பொருளுக்கு அடிமை யானவர்கள் வழக்கு மற்றும் நீதிமன் றம் என வருடக் கணக்கில் காலத்தை வீணடிக்காமல் அவர்களின் சிறந்த எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வகை யில் இந்த புனர்வாழ்வு பணியக சட் டம் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் விடுதலை புலிகள் அமைப்பின் போராளி களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டது. அக்காலக்கட்டத்தில் சுமார் 12 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட விடுதலை புலிகள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ் வளிக்கப்பட்டதை எவரும் மறந்து விடக்கூடாது.

இந்த சட்டம் மூலம் ஓரிரு தினங் களில் தயாரிக்கப்பட்டதல்ல துறை சார்ந்த சிரேஷ்ட சட்டத்தரணிகள் 300 பேரின் உழைப்பு இதில் காணப் படுகிறது. இதில் குறைபாடுகள் காணப்பட்டால் அதனை திருத்திக் கொள்ள முடியும். சிறந்த தீர்மானம் எல்லாவற்றுக்குமே எதிர்க்கட்சியி னர் தடை போட்டு விமர்சனங்களை மேற்கொள்வது சிறந்ததல்ல அது நாட் டின் எதிர்காலத்தையே பாதிக்கும்.

இளம் தலைமுறையினர் போதைப் பொருள் பாவனைக்கு சடுதியாக அடிமையானகியுள்ளார்கள் அதே போன்று நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் வலை யமைப்பில் 500க்கும் மேற்பட்ட வர்கள் செயல்படுகின்றனர்.

நெத்தலி மீன்களே சிறைத் தண்டனை அனுபவிக்கும் நிலையும் அதனால் பாரிய போதைப் பொருள் விலாங்குகளான வர்த்தகர்களின் வழக்குகளை கூட விசாரிக்க நேரம் கிடைக்காத நிலைமையே தற்போது காணப்படுகிறது.

கடந்த 2005 ஆம் ஆண்டு முன் னாள் விடுதலைப்புலி உறுப்பினர் கள் 12 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் புனவாழ்வளிக்கப்பட்டனர். நான் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றபோது அவர்களில் 200 பேரள வில் என்னை வந்து சந்தித்தனர். அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அவர்கள் புனர்வாழ்வு செய்யப் படாமல் இருந்திருந்தால் இன்னும் சிறைகளிலேயே இருக்க நேரிட்டி ருக்கும். அவர்கள் வெளிநாடு போக முடியாது. சமூகத்தில் அவர்கள் குற்ற வாளிகளாகவே பார்க்கப்படுவர். அந்த நிலை மாற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிகள்இ வழிதவறும் நபர் களை இலக்காகக் கொண்டே இந்த சட்டம் மூலம் கொண்டுவரப்பட வுள்ளது. குற்றவாளிகளாக காணப் படுவோர் வழக்குகளை எதிர்நோக்க நேரும். எனினும் தவறான கருத்துக் களுடன் வழிதவறும் நபர்கள் புனர் வாழ்வு அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்கள் சமூகமயப் படுத்தப்பட்டு சிறந்த எதிர்காலத்தை பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.

# 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை!

## குணதாஸ அமரசேகர கூறுகிறார்

கொழும்பு, ஜன. 19

நாட்டில் 13 ஆவது அரச மைப்பை நடைமுறைப்படுத்தி னால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக் கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் 13ஐ அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது என்றும் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அமைப் பாளர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

18ஆம் திகதி பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசிய லமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவதற்காக வடக்கு மக்களுக்கு வாக்கு றுதியை வழங்கி இருக்கிறார். மேலும் வடக்கு - கிழக்கு பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதாகவும் கூறி வருகிறார். இதனை கூறு வதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகார மும் கிடையாது. அதனை நிறைவேற்ற வேண் டுமாயின் அவருக்கு மக்களாணை வேண்டும். அது அவரிடம் காணப்படுகின்றதா?

ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்தது 13ஐ நிறைவேற்றவோ அல்லது நாட்டில் புரட்சி ஏற்படுத்தி அதன் ஊடாக அரசியல் மாற் றத்தை ஏற்படுத்தவோ அல்ல. அதிகாரத்தை விட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலப்பகுதி யில் எஞ்சியிருக்கும் காலப்பகுதியை முன் னெடுத்து செல்லவும், நாட்டு மக்களை வழி நடத்தவும் மற்றும் நாட்டை பாதுகாக்கவும் என்பதை ரணில் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், மக்களாணை பெற்று ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டு முறையாக நாட்டை ஆள முடியாமல் தப்பியோடிய கோட்டாபயவுக்கு பதிலாக வெற்றிடமாக காணப்பட்ட ஜனாதிபதி பதவியை நிரப்பு வதற்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் கள் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டார் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் 13ஐ அமுல்படுத்த எந்த வொரு அதிகாரமும் தற்பொழுது ரணிலுக்கு கிடையாது. மேலும் கோட்டாபய ராஜ பக்ஷவால் நிறைவேற்ற முடியாமல் விட்டுச் சென்ற வேலைத் திட்டங்களை முன்னெ டுத்து செல்வதே அவருடைய தற்பொழு துள்ள பொறுப்பாகும்.

ஜனாதிபதி ரணில் அரசியலில் இருந்து மக்களால் ஒதுக்கப்பட்ட மற்றும் தேர்தலின் போது நிராகரிக்கப்பட்டதோடு பாராளுமன் றத்தில் கூட அங்கம் வகிக்க தகுதியில்லாத நபர். இவ்வாறான ஒருவருக்கு அரசியமைப்பை மாற்றுவதற்கு எப்படி அதிகாரம் இருக்கிறது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் 13 ஐ நடைமுறைப்படுத்துவதா னால் யாருக்கு இலாபம்? அதன் பயனை யார் பெற்றுக்கொள்ள போவது? இந்நிலையில் இந்தியாவின் வேண்டுகோளுக்கு இனங்கவே 13ஐ நடைமுறைப்படுத்த ரணில் ஆர்வம் காட்டுகிறார். அவர்கள் இலங்கை மீது முழுமையாக அதிகாரத்தை பயன்படுத்தி 13ஐ நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

மேலும் அமெரிக்காவுக்கும் அதில் ஒரு பங்கு இருக்கிறது. அன்று 13ஐ நடைமுறைப் படுத்த ஜே. ஆர். ஜெயவர்த்தன கைச்சாத் திட்ட போது அமெரிக்கா உயர்ஸ்தானிகரே முதலில் வாழ்த்து செய்தி அனுப்பினார். எம்மை பொறுத்தமட்டில் இந்தியா மற்றும் அமெரிக் காவே இதன் பின்னணியில் இருக் கிறது.

நாட்டில் 13ஆவது அரசமைப்பை நடை முறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல் வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்பு களின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை - என்றார். (ஐ)

கல்வி tv CHANNEL-1

**19.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**19.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

### கூட்டமைப்பு பிளவடைந்ததன் எதிரொலி!

# கல்முனை பிரதேசத்தில் கட்சிகளை விடுத்து சுயேச்சையாகக் களமிறங்க அபிப்பிராயம்!

அம்பாறை, ஜன. 19

**கல்முனை தமிழ் பிரதேசங்களில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கட்சிகளை விடுத்து சுயேச்சையில் களமிறங்க தமிழ் மக்கள் கருத்துரைத்துள்ளனர்.**

கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை கல்முனை அம்மன் கோவில் வீதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் கிராமங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அங்கு மக்கள் மேற்படி அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடைந்ததன் எதிரொலி மற்றும் கடந்த தடவை கருணா அம்மான் வாக்குகளை பெற்ற பின்பு மக்களை நிர்க்கதியாக விட்டுவிட்டுச் சென்றமை போன்ற பல விடயங்களை சுட்டி காட்டிய மக்கள், இம்முறை இந்தக் கட்சிகளை விடுத்து சுயேச்சையில் போட்டியிடவேண்டும் என்று கருத்தை தெரிவித்தனர்.

இதனை அடுத்து கல்முனை இளைஞர் ஒன்றியம் இரட்டை வட்டாரமான கல்முனை பன்னிரண்டாம் வட்டார மக்களின் அபிப்பிராயங்களை பெறும் கூட்டத்தை ஆலயங்களின் ஒலிபெருக்கி வாயிலாக பகிரங்கமாக அறிவித்து மாமாங்கப் பிள்ளையார் ஆலய பல் தேவைக் கட்டடத்தில் ஒன்றியத் தலைவர் ஆறுமுகம் நிமலன் தலைமையில் நடத்தியது .

இதன்போது அங்கு வருகை தந்த மக்கள் கல்முனை மாநகர சபைக்கு சுயேச்சையில் களமிறங்கவேண்டும். அதற்காக ஒரு நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்றும் கருத்துரைத்தனர்.

அதன் பின்னர் சகல வட்டாரங்களுக்குமான வேட்பாளர்களை தெரிவு செய்வது என்றும் முடிவானது.

இதேவேளை, கல்முனை 12 ஆம் வட்டாரத்துக்கான ஒரு வேட்பாளராக சந்திரசேகரம் ராஜனும், சேனைக்குடியிருப்புப் பிரதேசத்தில் கே.செல்வராஜாவும், நீலாவணைப் பிரதேசத்தில் வே. அரவிந்தனும் மக்களால் தேர்வு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (அ)



# யானையால் பலியானவரின் மனைவிக்கு ஒரு லட்சம் ரூபா!

அம்பாறை, ஜன. 19

யானைத் தாக்குதலில் பலியான குடும்பஸ்தர் ஒருவரின் மனைவிக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

இச்சம்பவம் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றது.

கடந்த 5 ஆம் திகதி தங்கவேலாயுதபுரத்தில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி மரணம் அடைந்த அமரர் புவிதராசன் ரசிகரனின் குடும்பத்திற்கே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு இதனை வழங்கியது. இழப்பீட்டு தொகையாகிய ரூபா 1 மில்லியன் தொகையின் முதற்கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு இலட்சம் ரூபா அவரது மனைவியிடம் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழங்கினார். (அ)



# வறிய குடும்ப மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

திருமலை, ஜன. 19

திருகோணமலை - குளிக்குஞ்சிமலை கிராமத்தில் வசித்து வருகின்ற மிக வறிய குடும்பங்களின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு காப்போம் நிறுவனத்தின் பிரதம நிறை வேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தலைமையில் குளிக்குஞ்சிமலை கிராம அபிவி ருத்திச் சங்க கட்டுடத்தில் இடம்பெற்றது.

குளிக்குஞ்சிமலை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட மிக வறிய குடும்பங்களிலுள்ள 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகளை காப்போம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன், செயலாளர் கு.எப்சிதா, ஆலோசகர் க.ஞானேந்திரன் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்களினால் வழங்கப்பட்டது.

குறிப்பாக, அக்கிராமத்தில் வசித்து வரும் மாணவர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக மாலைநேர வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக காப்போம் நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்சமய ஒன்றியத்தின் ஐக்கிய பொங்கல் விழா



மட்டக்களப்பு, ஜன. 19

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஐக்கிய பொங்கல் விழா நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

'பல்சமயங்களாக ஒன்றிணைந்து உழவர்களுக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பொங்கல் விழா புதுமுகத்துவாரம் காயத்திரி பீட வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை ஏ.யேசுதாசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ் அடிகளார், உப தலைவர் மொகமட் சாஜஹான் மௌலவி, பிள்ளையாரடி ஆஞ்சநேயர் அலய பிரதம குரு ஜெகதீஸ்வரக் குருக்கள், அமெரிக்கன் சிலோன் மிசன் குரு முதல்வர் அருட்பணி எம்.லூக்கேயன், ஜெயந்திபுரம் மத்தியஸ்தானத்தின் விகாராதிபதி கட்டஹிரகம தம்மஸ்ரீ,

காயத்திரி பீடத்தின் பிரதம குரு சிவஸ்ரீ.பீ.கிருஸ்ணமூர்த்தி குருக்கள்

மற்றும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதான செயற்திட்ட இணைப்பாளர் இக்னேசியஸ் கிறிஸ்டி, பல்சமய ஒன்றியத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள், பிரதேச பல்சமய குழுக்களின் உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# கல்முனை நகரில் பொங்கல் விழா



அம்பாறை, ஜன. 19

அம்பாறை மாவட்டத்திற்கான பிரதான தைப்பொங்கல் விழா, கல்முனை வடக்கு உப பிரதேச செயலக அனுசரணையுடன் கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.சங்கீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பொங்கல் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இதில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எல்.புத்திக்க, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர், வைத்தியர் புஷ்பலதா லோகநாதன், அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கே.ஜெயராஜ் உள்ளிட்டோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கையின் தேசியக் கொடி, நந்திக்கொடி, தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் கொடி என்பன அதிதிகளால் ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நடனம் உட்பட தமிழர் பாரம்பரிய கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டிருந்தன.

அத்துடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ், இளைஞர் சேனை அமைப்பினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (அ-06)

ஈழநாடு



# ஜூன் மாதத்தில் இந்தியாவையும் பொருளாதார பெருமந்தம் தாக்கும்

## முதன்முறையாக ஒப்புக்கொண்ட மத்திய அரசு

புதுடில்லி, ஜன. 19

**உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி இந்தியாவையும் தாக்கக் கூடும் என இந்திய மத்திய அரசு முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.**

**நாக்பூரில் ஆரம்பமாகியுள்ள ஜி-20 நாடுகளின் உட்கட்டமைப்பு பணிக்குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் நாராயண் ரானே அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.**



நகரங்களை பொருளாதார வளர்ச்சி மையங்களாக மாற்றுதல், நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கு நிதியளித்தல் மற்றும் எதிர்காலத்தை தயார்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன.

மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் நாராயண் ரானே இந்த கூட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றினார்.

இதன்போது, தற்போது வளர்ந்த நாடுகள் பலவும் பொருளாதார பெருமந்தத்தை எதிர்கொண்டுள்ளன என்பதே உண்மை. இந்தியாவையும் வரும் ஜூனுக்கு பிறகு பொருளாதார பெருமந்தம் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டு மக்களை பாதிக்காத வகையில் தடுக்க மத்திய அரசும், பிரதமர் மோடியும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர், என நாராயண் ரானே தெரிவித்தார்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளை பொருளாதார பெருமந்தம் அச்சுறுத்தும் நிலையில், இந்தியாவை அது தாக்க வாய்ப்பே இல்லையென இதற்கு முன்னர் பல தடவைகள் இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்து வந்தார்.

இந்த நிலையிலேயே பொருளாதார பெருமந்த நிலை எதிர்வரும் காலத்தில் இந்தியாவிலும் ஏற்படுமென மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை அமைச்சர் நாராயண் ரானே தெரிவித்துள்ளார். (அ)



# கிரேட்டா துன்பெர்க் ஜேர்மனியில் கைது!

பேர்லின், ஜன. 19

சுவிட்ஸர்லாந்தின் காலநிலை ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க், ஜேர்மனியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மனியின் காலநிலை விவாதத்திற்கு ஒரு முக்கிய புள்ளியாக மாறிய, மேற்கு ஜேர்மனியின் நிலக்கரிச் சுரங்கத்தின் விரிவாக்கத்துக்கு எதிரான போராட்டத்தின்போது, நேற்று முன்தினம் அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

கார்ஸ்வீலர் நிலக்கரிச் சுரங்கத்தின் விரிவாக்கம் காரணமாக அருகிலுள்ள சிறிய கிராமமான லுட்செராத் இந்த எதிர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் சனிக்கிழமையன்று குறைந்தது 15,000 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் ஒரு யுவதியாக உரையாற்றியதிலிருந்து உலகின் மிக முக்கியமான காலநிலை ஆர்வலர்களில் ஒருவராக 20 வயதான துன்பெர்க் கருதப்படுகிறார்.

லுட்செராத் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்காக துன்பெர்க் இந்த வாரம் ஜேர்மனிக்குச் சென்றிருந்தார்.

நேற்று, சுரங்கத்தின் விளிம்பை நெருங்கிய பின்னர், காவல்துறையினரால் அழைத்துச் செல்லப்பட்ட எதிர்ப்பாளர்கள் குழுவில் அவரும் ஒருவர் என்று ஜெர்மன் ஊடகங்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், அவர் விரைவில் விடுவிக்கப்பட்டதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. (அ)

# ஜேர்மனி பாதுகாப்புத்துறை அமைச்சர் கிறிஸ்டைன் லாம்ப்ரெட் இராஜிநாமா!

பேர்லின், ஜன. 19

ஜேர்மனி பாதுகாப்புத்துறை அமைச்சர் கிறிஸ்டைன் லாம்ப்ரெட் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிராக உக்ரைனின் ஆயுதப் படைகள் வெற்றி பெற உதவுவதற்காக உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை அதிகரிப்பதற்கு ஜேர்மனி ஆலோசித்துள்ள நிலையில் அவரது பதவி விலகல் வந்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்து வந்த அவர், முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பொறுப்பில் மேம்போக்காக இருந்து வந்ததாக விமர்சனங்கள் எழுந்ததையடுத்து தனது பதவியை இராஜினாமா செய்தார்.

பாதுகாப்புத் துறை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக பதவியிலிருந்து விலகுவதாக லாம்ப்ரெட் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததை ஜேர்மனி அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸ், ஏற்றுக் கொண்டதாக அரசாங்க செய்தித் தொடர்பாளர் கூறினார்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்குத் தேவையான இராணுவ உதவிகளை அளிப்பதில் லாம்ப்ரெட் தயக்கம் காட்டி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ரஷ்யாவுக்கான துப்பாக்கிகளை தயாரித்து வருகின்றது இந்தியா!



புதுடில்லி, ஜன. 19

இந்தியாவில் ரஷ்யாவின் கலாஷ்நிகோவ் ஏகே-203 துப்பாக்கிகள் தயாரிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் அமேதியில் இந்தோ-ரஷ்யா துப்பாக்கி தயாரிப்பு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் ரஷ்யாவின் கலாஷ்நிகோவ் ஏகே-203 துப்பாக்கிகளைத் தயாரிக்க தொடங்கியுள்ளது. இதுதொடர்பாக ரஷ்ய அரசின் ராஸ்டெக் பாதுகாப்பு நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில், இந்தோ-ரஷ்யா துப்பாக்கி தயாரிப்பு நிறுவனம் கலாஷ்நிகோவ் ஏகே-203 துப்பாக்கிகளின் முதல் தொகுப்பை தயாரித்துள்ளது. அவற்றை இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும்.

கலாஷ்நிகோவ் ஏகே-203 துப்பாக்கிகள் தயாரிப்பை தொடங்கியதன் மூலம், இந்திய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்க அமைப்புகளில் பயன்படுத்துவதற்கு வசதியான, உயர்தர, நவீன சிறிய ரக ஆயுதங்கள் பிரவேசிக்கும். சிறந்த பணிச்சூழல், துப்பாக்கிச்சூடு வீரர்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் தன்மை, உயர் செயல்திறன் பண்புகள் ஆகியவற்றை இந்த வகை துப்பாக்கி ஒருங்கிணைக்கிறது. இது உலகின் சிறந்த தாக்குதல் துப்பாக்கிகளில் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நியூசிலாந்துடனான போட்டி ஷூப்மன் கில் இரட்டை சதம்!




ஹைதராபாத், ஜன. 19

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்தியத் தொடக்க வீரர் ஷூப்மன் கில் முதன் முறையாக இரட்டை சதம் அடித்தார்.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் தொடர் நடக்கிறது. முதல் ஒருநாள் போட்டி நேற்று நடந்தது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியில் கே. எல். ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர், அக்ஷர் படேல் ஆகியோர் இடம்பெறவில்லை.

சொந்தக் காரணங்களுக்காக ராகுல், அக்ஷர் படேல் விலகினர். ஷ்ரேயாஸ் ஐயருக்குக் காயம். இதனால் ஹார்திக் பாண்டிட்யா, ஷர்துல் தாக்குர், இஷான் கிஷன் ஆகியோர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளார்கள். ஷர்துல் தாக்குர், குல்தீப் யாதவ், தமிழகத்தைச் சேர்ந்த வாஷிங்டன் சுந்தர் ஆகியோரும் இந்திய அணிக்குத் தெரிவாகியுள்ளார்கள். நியூசிலாந்து அணியில் வில்லியம்சன், சௌதி, சோதி ஆகியோர் இடம் பெறவில்லை.

தொடக்கவீரர்களுள் ஒருவராகக் களமிறங்கிய ஷூப்மன் கில் ரோஹித் சர்மாவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். தொடர்ந்து அபாரமாக ஆடிய அவர் 87 பந்துகளில் சதம் விளாசினார்.

ஷூப்மன் கில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நிலையில் மறுபுறம் வேகமாக விக்கெட்கள் சாய்ந்தன. ஆனால், நிலைத்து ஆடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷூப்மன் கில் இரட்டை சதத்தைப் பூர்த்தி செய்தார். 149 பந்துகளில் 9 சிக்ஸர்கள், 19 பௌண்ட்ரிகள் அடங்கலாக 208 ஓட்டங்களை குவித்தார்.

இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 349 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ஐ)




# அஸ்வினின் கருத்துக்கு ரோஹித் சர்மா ஆதரவு

ஹைதராபாத், ஜன. 19

ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் ஆட்டங்களை முன்பே ஆரம்பிக்க வேண்டும் என்கிற அஸ்வினின் கருத்துக்கு இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒருநாள் ஆட்டங்கள் பகலிரவில் நடைபெறும்போது மாலை 7 மணிக்குப் பிறகு மைதானத்தில் நிலவும் பனிப்பொழிவு காரணமாகப் பந்துவீச்சாளர்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. பந்து ஈரமாகி விடுவதால் அவர்களால் நினைத்தபடி பந்துவீச முடிவதில்லை. இந்தப் பிரச்னையால் இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் போட்டிகளில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடும் அணிகளுக்குச் சாதகமான நிலை ஏற்பட்டு விடுகிறது. இதைத் தடுக்க ஒரு மாற்று யோசனையை முன்வைத்தார் அஸ்வின். ஒருநாள் உலகக் கோப்பை இந்தியாவில் நடைபெறுவதால் அனைத்து பகலிரவு ஆட்டங்களும் காலை 11.30 மணிக்கு ஆரம்பித்தால் இந்தச் சிக்கல் ஏற்படாது என்றார்.

இந்நிலையில் அஸ்வின் கருத்துக்கு இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா ஆதரவு தெரிவித்து கூறியதாவது:

ஆட்டத்தை முன்பே ஆரம்பிப்பது நல்ல யோசனை. ஏனெனில்,அது உலகக் கிண்ணப் போட்டி வேறு. நாணயச்சுழற்சி விஷயத்தில் மிகவும் சமரசம் செய்து கொள்ளத் தேவையில்லை. அதேசமயம் நாணயச் சுழற்சியில் வெல்வதால் கிடைக்கும் பலனையும் ஒரேடியாக விட்டுவிட முடியாது. எனக்கு இந்த யோசனை பிடித்திருந்தாலும் எப்படிச் சாத்தியம் என்று தெரியவில்லை. தொலைக்காட்சியில் ஆட்டங்களை ஒளிபரப்பு செய்பவர்கள் ஆட்டம் எப்போது தொடங்க வேண்டும் என்று முடிவு செய்துகொள்வார்கள். ஓர் அணிக்கு மட்டும் சாதகமான சூழல் இல்லாமல் நல்ல விதமாக கிரிக்கெட் ஆட்டம் நடைபெறவேண்டும் என்றுதான் விரும்புவோம். ஆனால், இதெல்லாம் நம் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை - என்றார். (ஐ)

# ஐந்து மணி நேரம் போராடிய முர்ரே!

மெல்பர்ன், ஜன. 19

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஸ்கொட்லாந்தின் அண்டி முர்ரே 4 மணி நேரம் 49 நிமிடங்கள் போராடி இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 35 வயதான அண்டி முர்ரே, தரவரிசையில் 13ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை எதிர்த்து விளையாடினார்.

இந்த ஆட்டம் கடுமையான வெப்பம் காரணமாக ராட் லேவர் அரங்கில் மூடப்பட்ட கூரையின் கீழ் நடத்தப்பட்டது. சுமார் 4 மணி நேரம் 49 நிமிடங்கள் நடைபெற்ற போராட்டத்தில் அண்டி முர்ரே 6-3, 6-3, 4-6, 6-7 (7-9), 7-6 (10-6) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

4-ம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் 6-3, 6-4, 6-0 என்ற நேர் செற்றில் 75-ம் நிலை வீரரான ஸ்பெயினின் ராபர்டோ கார்பால்ஸை தோற்கடித்து 2-வது சுற்றில் நுழைந்தார். இந்த ஆட்டம் 2 மணி நேரம் 2 நிமிடங்களில் முடிவடைந்தது. 5ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் அண்ட்ரே ரூபலேவ் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செற்றில் அமெரிக்க ஓப்பன் முன்னாள் சம்பியனான ஆஸ்திரியாவின் டொமினிக் தியமை தோற்கடித்தார்.

8ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் ரெய்லர் ஃபிரிட்ஸ் 6-4, 6-2, 4-6, 7-5 என்ற செற் கணக்கில் ஜோர்ஜியாவின் நிகோலோஸ் பாசிலாஷ்விலியையும், 9ஆம் நிலை வீரரான டென்மார்க்கின் ஹோல்கர் ரூன் 6-2, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் சேர்பியாவின் பிலிப் கிராஜினோவிக்கையும் தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)





# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் நடால் வெளியேறினார்!

மெல்பர்ன், ஜன. 19

அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் பிரபல வீரர் நடால் 2ஆவது சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுதிரேலிய ஓப்பன் தொடரின் நடப்பு சம்பியன் நடால், 2ஆவது சுற்றில் அமெரிக்காவின் மெக்கன்ஸி மெக்டொனால்டை எதிர்கொண்டார்.

நடால் 4-6, 3-5 எனப் பின்தங்கியிருந்தபோது அவருடைய காலில் காயம் ஏற்பட்டது. இதனால் சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

இதன்பிறகு முழு உடற்தகுதியில் இல்லாதபோதும் தொடர்ந்து விளையாடினார். இறுதியில், நடாலை 6-4, 6-4, 7-5 என வீழ்த்தி 3-வது சுற்றுக்கு முன்னேறினார் மெக்டொனால்ட்.

# பெலின்டா பென்சிச் அடுத்த சுற்றில்!



மெல்பர்ன், ஜன. 19

கிராண்ட்ஸ்லம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பர்னில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஒலிம்பிக் சம்பியன் சுவிற்சர்லாந்தின் பெலின்டா பென்சிச் 6-1, 6-2 என்ற நேர் செற்றில் விக்ரோறியா தோமோவா (பல்கேரியா) வென்றார்.

இதேபோல் எஸ்தோனியாவைச் சேர்ந்த கோன்டா வெய்ட்டும் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆம் நிலை வீராங்கனை ஆன்ஸ் ஜாபியர் (துனிசியா), தரவரிசையில் 88ஆவது இடம் வகிக்கும் தமரா ஜிடான்செக்கை (சுலோ வேனியா) சந்தித்தார். இதில் ஜாபியர் 7-6 (10-8), 4-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

# 11 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

கொழும்பு, ஜன. 19

மூன்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட 11 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியின் பிரகாரம் குறித்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டி.அனுரங்க கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் இருந்து மலையகப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். காலி பிரிவில் கடமையாற்றி வந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எச்.பி.எம்.ஏ. டபிள்யூ. டி.பி.ஹப்புகொட புத்தளம் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எல்.யு.சமரசிங்க, கல்கிசை பிரிவில் இருந்து கொழும்பு போக்குவரத்துப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.எள்.பி. மாகெதரகம காலி பிரிவில் இருந்து கேகாலை தலைமையக பொலிஸ் பரிசோதகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

# தேர்தல் செலவுக்காக பணம் அச்சிடப்படாது

## அமைச்சர் பந்துல கூறினார்

கொழும்பு, ஜன. 19

தேர்தல் செலவுகளுக்காக பணம் அச்சிடப்படாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்டம் கட்டமாக திறைசேரியினால் இதற்கான நிதி வழங்கப்படும்.

தேர்தலுக்காக பணத்தை அச்சிட முடியாது. கடன் மறுசீரமைப்பு மற்றும் அத்தியாவசிய கடன்களை மீள செலுத்தல் தவிர்ந்த வேறு எந்தவொரு காரணிக்காகவும் பணத்தை அச்சிட அனுமதி வழங்கப்படமாட்டாது. இதுவே அரசாங்கத்தின் கொள் கையாகும்.

அரசாங்கத்தின் கொள்கை மீறப்பட்டால் இதனை விட பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு 8 பில்லியன் செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எனினும் இம்முறை நாட்டு நிலைமைகளுக்கமைய இந்த செலவுகள் இரு மடங்காக அதிகரிக்கக்கூடும் - என்றார். (அ)

# இலஞ்சம் வாங்க முயன்ற பொலிஸ் அலுவலர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத்தில் கள்ள உறுதி முடித்து, இடம்பெற்ற காணி மோசடி வழக்கில் தொடர்புடையவரிடம் இலஞ்சம் பெற முயன்ற குற்றச்சாட்டில், யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிகளினால் யாழ்ப்பாண புறநகர் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் போலி உறுதி முடித்து காணி மோசடிகள் இடம்பெற்றன. அது தொடர்பில் யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பலரைக் காப்பாற்றுவதற்கு பொலிஸார் முற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து நீதிமன்றின் உத்தரவினால் சட்டத்தரணி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தை விசாரணை செய்யும் பிரிவில் இடம்பெற்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வழக்குடன் தொடர்புடைய தரப்பிடம் பல லட்சம் ரூபாய் பணத்தை கையூட்டாகப் பெற முயன்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உள்படுத்தப்பட்டுள்ளார். (அ)

# 14 நாட்கள் மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன. 19

ஆரம்பமாக உள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி, பரீட்சை நடைபெறும் 14 நாட்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி நாடு பூராகவும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாளொன்றுக்கு 357 மில்லியன் ரூபா வீதம் தொடர்ச்சியாக 14 நாட்கள் மின்சாரம் வழங்குவதற்கு 5 பில்லியன் ரூபா செலவாகும் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (அ)

# மரண அறிவித்தல்



## திருமதி பொன்னம்பலம் சகுந்தலாதேவி

யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா 2ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சகுந்தலாதேவி கடந்த 16-01-2023 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சோமசுந்தரம் – தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும்,காலஞ்சென்ற சுப்பையாப்பிள்ளை பொன்னம்பலம் (முன்னாள் அதிபர் – வ/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி, காலஞ்சென்ற தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிருஷா (ஆசிரியை – வ/சமளங்குளம் அ.த.க பாடசாலை), ஜெகதீபன் (ஜெகன் – சுவிஸ்), அனுஷா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்ஷன் (அதிபர் – வ/இளங்கோ வித்தியாலயம்), காயத்திரி (சுவிஸ்), சிவேந்திரன் (முகாமையாளர் ISM Solutions) ஆகியோரின் அன்பு மாமியாரும், திவ்யா, அட்சயா, அஸ்வின், காருண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.01.2023) வியாழக்கிழமை அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

**நிருஷா (மகள்) - வவுனியா,**
**ஜெகதீபன் (ஜெகன் - மகன்) - சுவிஸ்,**
**அனுஷா (மகள்) - (கொழும்பு)**

# தேங்காய் விலை சடுதியாக உயர்வு



கொழும்பு, ஜன. 19

சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சில பிரதேசங்களில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபாவாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கூறுகின்றனர்.

பொதுச் சந்தையில் பெரிய தேங்காய் ஒன்று 100-120 ரூபாய் வரையிலும், சிறிய அளவிலான தேங்காய் 85 - 100 ரூபாய் வரை விற்கப்படுகின்றது.

அன்றாட உணவு தயாரிப்பதற்கு அத்தியாவசியமான தேங்காயின் விலை அதிகரித்துள்ளதால் தாம் பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது தேங்காய் அறுவடைக்கு பற்றாக்குறை உள்ளதாகவும் இது பெப்ரவரி இறுதி வரை நீடிக்கலாம் என தென்னை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வருடம் 3300 மில்லியன் தேங்காய் அறுவடையை எதிர்பார்ப்பதாக தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# மின்சாரம், எரிபொருள், வைத்தியசாலை தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகள்!

கொழும்பு, ஜன. 19

மின்சாரம் வழங்கல், எரிபொருள் விநியோகம் மற்றும் வைத்தியசாலை சேவைகள் என்பன தொடர்ந்து அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, மின்சார வழங்கலுடன் தொடர்புடைய அனைத்து சேவைகளும், கனிய வள உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் என்பன தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக காணப்படுகின்றன.

அத்துடன், வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மின்சார சபை ரூ. 10,500 கோடி கடன்!



கொழும்பு, ஜன. 19

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மின்சார சபையினால் வழங்கப்பட வேண்டிய 10,500 கோடி ரூபா விரைவில் செலுத்தப்படும் எனவும், தொடர்ந்து எரிபொருள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டு விநியோகத்தை பேணுவதற்கு தேவையான திட்டங்கள் வகுக்கப்படும் எனவும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய சட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் அதிகாரிகளுடனான எரிபொருள் ஒழுங்குபடுத்தல் மற்றும் விநியோகம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

## மகிந்த,...

களைப் பாதுகாக்க ஒரு நாடு எடுத்த சக்தி வாய்ந்த முடிவு இது என்று தெரிவித்துள்ள மீனாட்சி கங்குலி, உலகின் மற்ற பெரிய நாடுகளும் இதே போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்

*1983* முதல் *2009* வரை இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரின் போது செய்யப்பட்ட "மொத்த மற்றும் முறையான மனித உரிமை மீறல்களில்" அனைவரும் சம்பந்தப்பட்டவர்கள் - என்று அவர் கூறுகிறார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி, கனடா "சர்வதேச சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரான சர்வதேச தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவர உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது" என்றார். இதில் பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் ஆகியவை அடங்கும்.

மகிந்த ராஜபக்ஷ *2005-2015* வரை ஜனாதிபதியாக இருந்தார், உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்கள் உட்பட, இலங்கை இராணுவப் படைகள் ஏராளமான போர்க்குற்றங்களை இழைத்துள்ளன. இராணுவம் மருத்துவமனைகள் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதுடன், ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று காயப்படுத்தியது. பல போராளிகள் மற்றும் பொதுமக்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர் . ஐக்கிய நாடுகள் சபை, ஊடகங்கள் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் பிற குழுக்கள் அரசாங்கப் படைகள் மற்றும் விடுதலைப் புலிகளின் விரிவான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ச போரின் இறுதிக் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தார். போர்க்குற்றங்களை தவிர, ஊடகவியலாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களின் கடத்தல் மற்றும் கொலை செய்ததில் தொடர்புடையவராக கருதப்படுகிறார் . அவர் *2019* இல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் பொருளாதாரத்தை அவர் தவறாகக் கையாண்டதால் தூண்டப்பட்ட வெகுஜன எதிர்ப்புகள் அவரை ஜூலை *2022* இல் இராஜிநாமா செய்யவைத்தன.

உள்நாட்டுப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட 'மொத்த மற்றும் முறையான மனித உரிமை மீறல்களில்' சம்பந்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு முன்னாள் இராணுவத்தினருக்கு எதிராக கனேடிய அரசாங்கம் பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடுத்த கோரிக்கைகள் நீண்டகாலமாக கவனிக்கப்படாமலேயே இருந்து வருகின்றன. மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர், "மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் நம்பகத்தன்மையுடன் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை ஆராயுமாறு" அரசாங்கங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் பொருளாதாரத் தடைகள் முக்கியமானவை, ஏனெனில் - முதல் முறையாக - அவை குற்றங்கள் செய்யப்பட்டபோது ஒட்டுமொத்த கட்டளையில் இருந்தவர்களை குறிவைக்கின்றன. இதை மற்ற அரசுகளும் பின்பற்ற வேண்டும். பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை அவர்களின் தலைமைப் பாத்திரம் எதுவாக இருந்தாலும் அவர்களைக் கணக்குப் போட்டு நீதியை உறுதிப்படுத்துவதற்கான முதன்மைப் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடம் உள்ளது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## கடனை...

ஐ. எம். எவ். தலைவர் கிறிஸ்ரலினா ஜோர்ஜூவாவுக்கு இந்திய அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். இலங்கையின் பொதுக் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு ஏற்றவாறு இலங்கைக்கு நிதியுதவி அல்லது கடன் நிவாரணத்தை அளிக்க இந்தியா இதன் போது உறுதியளித்தது.

இந்த நிலையில், முதிர்வு நீடிப்பு, வட்டி வீதம் குறைப்பு அல்லது இது போன்ற நிதியுதவி அல்லது கடன் நிவாரணம் வழங்கும் பிற நிதி செயல்பாடுகள் மூலம் நடுத்தர - நீண்டகால கடன்கள் மறுசீரமைப்புக்காக இலங்கை மற்றும் பாரிஸ் கிளப்புடன் தொடர்ந்தும் பேச்சு நடத்த உறுதியளிப்பதாகவும் இந்தியா கூறியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது இலங்கை. நெருக்கடியில் இருந்து மீள கடன் மறுசீரமைப்பை முக்கிய கடன் வழங்குநர்களான இந்தியா, ஜப்பான், சீனாவிடம் எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பான் ஆதரவளித்துள்ள நிலையில், இந்தியா, சீனாவின் நிலைப்பாடு இழுபறியாக இருந்தது. இந்நிலையில், இந்தியாவும் கடன் மறுசீரமைப்புக்கு இணங்கியுள்ளது.

சீனாவும் கடன்மறுசீரமைப்புக்கு இணங்கும் பட்சத்தில் இலங்கைக்கு *290* கோடி டொலர்கள் கடன் ஐ. எம். எவ். ஊடாகக் கிடைக்கப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேலன்...

டம் நடைபெற்றது.

இந்தப் பேரணி நல்லூர் அரசடி வீதியில் வைத்து பொலிஸ், விசேட அதிரடிப் படை, இராணுவத்தால் மறிக்கப்பட்டது. இதைத் தகர்க்க போராட்டக்காரர்கள் முனைந்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் உருவானது. இதைத் தொடர்ந்து பொலிஸார் தண்ணீர் தாரைப் பிரயோகம் செய்து போராட்டக்காரர்களை கலைத்தனர். இந்தப் போராட்டத்தில் வேலன் சுவாமிகள் முன்னிலை வகித்திருந்தார்.

இந்த நிலையிலேயே பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் வேலன் சுவாமிகள் நேற்று கைது செய்யப்பட்டார். இந் நிலையில் அவர் நேற்றைய தினமே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்காக சட்டத்தரணிகளான எம். ஏ. சுமந்திரன், வி. மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையாகினர். (ஐ)

## அரசமைப்பின்...

வர்த்தன முன்வைத்த பிரரேரணைக்கு பாராளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போது, பிரதமர் தினேஷ் குணவர்த்தன விசேட அறிவிப்பு ஒன்றை மேற்கொண்டு, அரசமைப்பின் *41*அ உறுப்புரையின் *1*ஆம் உப உறுப்புரையின் பிரகாரம் அரசமைப்பு பேரவைக்கு பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினாலும் இந்த சிவில் உறுப்பினர்கள் *3* பேரும் பெயரிடப்படுவதாக சபைக்கு அறிவித்து அதற்கான அனுமதியை கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய பாராளுமன்றம் குறித்த சிவில் பிரதிநிதிகள் *3* பேருக்கும் அனுமதி வழங்கியது. (ஐ)

## புனர்வாழ்வு...

பிக்கப்பட்டபோது போராட்ட செயல்பாட்டாளர்களையும் புனர்வாழ்வு என்ற போர்வையில் அடக்குமுறைகளுக்கு உட்படுத்த முடியும் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

எனினும், உயர் நீதிமன்றத்தில் சட்ட மூலத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்திய பின்னர், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மாத்திரம் புனர்வாழ்வுக்காக இந்த சட்டம் வரையறுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## தலைவர்...

காலத்தில் தமிழரின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தவே அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. பலம் பொருந்திய அரசியல் இருப்பை தங்களின் தலைமையில் கூட்டமைப்பு நிரூபித்துக் காட்டியுமிருந்தது.

தமிழரின் அரசியல் இணைப்பும் ஒற்றுமையும் ஒரேகொள்கைக்கான அணியாகவும் மக்களின் அங்கீகாரமாகவும் *2010* ஆண்டுத் தேர்தல் வரை ஒவ்வொரு தேர்தல் முடிவும் வலுவானதொரு செய்தியை பெரும்பான்மை அரசியல் தலைமைகளுக்குச் சொல்லிக் கொண்டே இருந்தன. ஆனால், சில ஒட்டகங்கள் கூட்டமைப்பெனும் கூடாரத்துக்குள் நுழைந்ததோடு, கூட்டமைப்பு தேய்ந்து கொண்டே சென்று *2023* இல் அமாவாசையாகி எல்லாம் முடிந்துவிட்டது போன்று தோன்றுகின்றது.

*2009*ஆம் ஆண்டு யுத்தம் மெனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்க சில விஷமிகள் கூட்டமைப்புக்குள் உள்நுழைந்தார்கள். திட்டமிட்டு பிரிவினையைத் தூண்டி அதை உங்களை வைத்தே அமுல்படுத்தினார்கள். கடைசியில் தமிழரசுக்கட்சியைத் தவிர இப்போது ஒருகட்சியும் இல்லாத நிலையில் தனிக்கட்சி கூட்டமைப்பாகாது என்பதை நீங்கள் அறிவீர்களா? கூட்டமைப்பு இல்லாமல் அதன் தலைவர் என்ற பதவியும் பறிபோய், வெறும் பாராளுமன்ற உறுப்பினராக நீங்கள் நிற்பதைக் காண மனம் சகிக்கவில்லை.

தமிழர் அரசியலின் இறுதி நம்பிக்கையாகவும் ஒளியாகவும் திகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டும் பல்வேறு காரணங்களைச் சொல்லி வெளியேறிய அனைவரையும் மக்கள் அரசியல் அநாதைகளாக்கிய வரலாறு முன்பிருந்தது. ஆனால், அது உங்கள் காலத்தில் சிதைவுற்று இறுதியில் கூட்டமைப்பு இருந்தாலும் ஒன்று இல்லாவிட்டாலும் ஒன்று என்ற நிலைக்கு மக்களைக் கொண்டுவந்துவிட்டது.

நீங்கள் தமிழ்த் தேசியத்தின் அரசியல் இருப்புக்கு சாவுமணியடிப்பீர்கள் என்பது பலருக்கும் அப்போது தெரிந்திருந்தது. ஆனாலும் உங்களில் மாற்றம் வரும் என்று நம்பிக்கையோடு மக்களும் காத்திருந்தார்கள் - விசுவாசிகளான நாமும் காத்திருந்தோம். ஆனால், மகிந்த நாட்டை காப்பாற்றியதாலேயே திருகோணமலைக்கு சுதந்திரமாக சென்று வரமுடிகின்றது என பாராட்டியதுடன், *2020*ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பின்னர் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பிரதேசவாதத்தை கக்கியதுடன் தேசியத் தலைவர் மகிந்த என பாராளுமன்றத்தில் நீங்கள் புகழாரமும் சூட்டினீர்கள். இப்போது ஒப்பாரும் மிக்காருமில்லா தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னாபின்னமாக்கி வரலாற்றுத் துரோகத்துக்கு பாத்திரவாளியாகி விட்டீர்கள்.

இனிமேல் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று நீங்கள் எந்த முகத்தோடு போய் ரணிலுடன் பேச்சு நடத்தமுடியும்? கூட்டமைப்பு இருக்கும் வரையே உங்களுக்கும் மரியாதை மக்களிடையே மட்டுமல்ல அரசியல் தலைவர்களிடமும் இருந்தது . ஆனால், கூட்டமைப்பே இல்லையென்றான பின்னர், அற்ற குளத்து அறுநீர்ப்பறவையாக அவையெல்லாமே பறந்தோடிப் போய்விட்டதை ஏன் இன்னும் உணராதிருக்கிறீர்கள் என்பது ஆச்சரியமே - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணம்...

ஒட்டிய நிகழ்வுகள் தருபவையே.

யாழ். மாநகர சபை முதல்வராக ஆர்னோல்ட் கத்தோலிக்கர். நல்லூர் திருவிழா காலத்தில் அவர் ஜேர்மனியில் இருந்தமையும் வரலாறு.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவின் அனைத்து நிலதாரி பிரிவுகளும் நல்லூர் பிரதேச செயலக பிரிவின் நிலதாரி பிரிவுகளுள் பாதியுமாக தோராயமாக *40* நிலதாரி பிரிவுகள் யாழ். மாநகர சபை எல்லைக்குள்.

நந்திக் கொடியே நல்லூர் அரசின் கொடி. ஆறுமுக நாவலர் காலத்தில் பிரிட்டோவை எதிர்த்து இராமநாதனை வேட்பாளராக முன்மொழிந்தார்.

யாழ்ப்பாணம் சிவபூமி. *400* ஆண்டுகளுக்கு முன்பு கத்திமுனையில் - வாள் முனையில் - துப்பாக்கி முனையில் கிறிஸ்தவர் ஆயினர் சைவர்களுள் சிலர்.

அக்காலத்தில் கிறிஸ்தவ மேலாட்சியில் சைவர்கள் நலிந்தனர். கிறிஸ்தவ ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கோலோச்சினீர்கள்.

கிறிஸ்தவர்களிடம் இருந்து விடுதலை பெற்ற பின்பும் சைவர்கள் தங்கள் நிலத்தில் சிவபூமியில் கோலோச்ச முடியவில்லை. எனில், விடுதலையின் பொருள் என்ன? அப்போது துப்பாக்கி முனையில் அரசாட்சி கிறிஸ்தவர் கையில். இப்போதும் அரசாட்சி கிறிஸ்தவருக்கு வேண்டுமா?

எத்தனையோ நாடுகளில் எத்தனையோ நகரங்களில் உள்ளூராட்சியில் மாநகர சபையில் முதல்வராகக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

சைவ சமயிகள் யாழ்ப்பாணத்தை விட்டால் வேறு எங்கு போக முடியும்? சைவர்களுடைய நிலத்தில் பூமியில் நகரத்தில் சைவர்கள் ஆட்சி, சைவர்களின் தலைமை. பெரும்பான்மை எண்ணிக்கையில் சைவர்களைக் கொண்ட யாழ். மாநகர சபையில் சைவ சமயியே முதல்வராகுக. வேறு எந்த சமயத் திருவிழாவிலும் கிடைக்காத கணிசமான வருவாய் கிடைக்கும் நல்லூர் திருவிழாவில் பங்கேற்கச் சைவ சமயியே மாநகர சபை முதல்வராகுக - என்றுள்ளது. (ஐ)

## ஜெய்சங்கர்...

யோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்துவார். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன், இணைச் செயலர் புனித் அகர்வால், இயக்குநர் சந்தீப் குமார் பையப்பு, துணைச் செயலர் (இலங்கை), நிதி சௌத்ரி மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் துணைச் செயலர் ரகூ பூரி ஆகியோரும் வருகைத்தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஐ அமுலாக்கும்...

வேண்டும். அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் வன்மையான முறையில் அடக்கப்படுவது இயல்பாக இடம்பெறுகிறது.

விடுதலை புலிகளின் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கும், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. *12* ஆயிரம் விடுதலை புலிகளின் போராளிகள் சுயமாகவே இராணுவத்தில் சரணடைந்தார்கள். புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆகவே போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களையும்,விடுதலை புலிகள் போராளிகளையும் ஒரு கோணத்தில் பார்க்க முடியாது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் பணிகள் நீதிமன்ற நடவடிக்கை ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே போதைப்பொருள் அடிமையானவர்களுக்கு பாதுகாப்பானதாக அமையும்.

நாட்டு மக்கள் பட்டினியால் வாழும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதை போல் அரசியல் நோக்கத்துக்காக அரசமைப்பின் *13*ஆவது திருத்தத்தை முழுமையான நிறைவேற்ற முயற்சிக்கிறார்.

தெற்கு அரசியல்வாதிகள் *13*ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று ஜனாதிபதி வடக்கு மக்களிடம் பொய்யுரைக்கிறார்.

அரசமைப்பின் *13* ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்டுத்தினால் நாட்டில் தேவையற்ற பிரச்சினை தோற்றம் பெறும். ஆகவே, இந்த பாவ செயலில் பங்குதாரராகுவதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர்மீதான பழிவாங்கல்களை நிறுத்த வேண்டும்!

## அரசிடம் சர்வதேச அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 19

**இலங்கை அதிகாரிகள் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான அனைத்து வகையான பழிவாங்குதல்களையும் நிறுத்தவேண்டும் நியாயபூர்வமான அதிருப்தி மற்றும் பிரசாரங்களில் ஈடுபடும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை இலக்கு வைப்பதை தடுத்து நிறுத்தவேண்டும் என புரொன்ட் லைன் டிபென்டர்ஸ் என்ற சர்வதேச அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

சர்வதேச தமிழர்களின் விழாவான தைப்பொங்கலை குறிக்கும் விதத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் சென்றிருந்தவேளை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக நீர்த்தாரை பிரயோகம் இடம்பெற்றதை கண்டிப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் -அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட நிலங்களை விடுவிக்கவேண்டும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். கருத்துவெளிப்பாடு மற்றும் ஒன்றுகூடலுக்கான தங்கள் உரிமையை பயன்படுத்திய அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் அளவுக்கதிகமான பலத்தை பயன்படுத்தியது என குறிப்பிட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் தங்கள் நேசத்துக்கு உரியவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக ஒரு தசாப்தத்துக்கு மேல் பரப்புரையில் ஈடுபட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களும் உள்ளனர் எனவும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகள் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான அனைத்து வகையான பழிவாங்குதல்களையும் நிறுத்தவேண்டும். நியாயபூர்வமான அதிருப்தி மற்றும் பிரசாரங்களில் ஈடுபடும் மனித உரிமை பாதுகாவலர்களை இலக்குவைப்பதை தடுத்து நிறுத்தவேண்டும். குறிப்பாக பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் - என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி பாராளுமன்றத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்!

## அநுரகுமார திஸநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமா, தேர்தலை பிற்போட வேண்டுமா என்பதை தனிநபர் ஒருவர் எவ்வாறு தீர்மானிக்க முடியும். ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்ற செயல்பாடுகளில் தலையிட்டு பாராளுமன்றத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பது அரசமைப்புக்கு முரண் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயல்படுவதை அவதானிக்க முடிகிறது. தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்டமூலம் மீதான விவாதத்தை எடுத்துக் கொள்வது தொடர்பில் மாறுப்பட்ட கருத்துகள் தற்போது முன்வைக்கப்படுகின்றன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் நடவடிக்கை நிறைவுப் பெற்று,வேட்புமனு தாக்கல் பொறுப்பேற்கும் நிலையில் தேர்தல் செலவு தொடர்பில் புதிய சட்டத்தை இயற்றினால் அது தேர்தல் செயல்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்டமூலம் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு செல்வாக்கு செலுத்த கூடாது என்ற இடைக்கால விதிவிதான திருத்தம் உள்வாங்கப்பட வேண்டும் அல்லது தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்டமூலம் தற்காலிகமாக பிற்போடப்பட வேண்டும் என்ற யோசனை பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், ஜனாதிபதி பாராளுமன்றத்தை தனது நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்.

முத்துறைகளின் அதிகாரம் அரசமைப்பின் ஊடாக வேறுபடுத்தப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறையை கட்டுப்படுத்துவது அரசமைப்புக்கு முரண். உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் பணியில் இருந்து விலகுமாறு அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு யார் பொறுப்பு என்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது.

குறித்த சுற்றறிக்கை தொடர்பில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கவில்லை என பிரதமர் குறிப்பிடுகிறார். ஆனால், அமைச்சரவை தீர்மானத்தை தான் செயல்படுத்தினார் என்று அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகிறார்.

தேர்தல் விடயத்தில் நிறைவேற்றுத்துறை அரசமைப்பு, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தக்கூடாது என்ற சிந்தனையில் இருந்துகொண்டு ஜனாதிபதி செயல்படுகிறார். தேர்தலை நடத்த வேண்டுமா இல்லையா என்பதை தனிநபர் ஒருவர் எவ்வாறு தீர்மானிக்க முடியும் - என்றும் கூறினார். (ஐ)

# போதையில் நின்ற குழு மாணவர்களை தாக்கியது!

கிளிநொச்சி, ஜன. 19

கண்ணகைபுரம் கிராமத்தில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கு சென்ற மாணவர்களில் சுமார் 15 மாணவர்களை வழியில் போதையில் நின்ற நான்கு பேர் தடிகளால் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில், அக்கராயன் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதாகவும், மூவர் கைது செய்யப்படவில்லை எனவும் பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணகைபுரம், 150 வீட்டுத் திட்டப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி கூடுதலாக காணப்படுவதாகவும் இதனை கட்டுப்படுத்துமாறு பொது மக்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கசிப்பை கட்டுப்படுத்துவதற்கு முக்கொம்பனில் காவல் பிரிவு ஒன்று அமைக்குமாறு பெற்றோரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு இரணைமடுவில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பாடசாலைக்கு வரவில்லை எனவும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# யாழ்ப்பாணம், வவுனியாவில் சமத்துவ கட்சி கட்டுப்பணம்!

வவுனியா, ஜன. 19

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை சமத்துவக் கட்சியினர் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் செலுத்தினர்.

இந்நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியினர் வவுனியா வெங்கலசெட்டிக்குளம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாணம் - பருத்தித் துறை நகர சபை ஆகியவற்றுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர். (ஐ)



# கிளிநொச்சியில் தமிழரசு கட்சி இரு சபைகளுக்கு வேட்புமனு

கிளிநொச்சி, ஜன. 19

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வகையில் இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் நேற்று மதியம் கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரு சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கை தமிழரசு கட்சியின் சார்பாக கிளிநொச்சி - கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நேற்று இரு பிரதேச சபைகளுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கை தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் செயலாளர் வீரபாகு விஜயகுமார், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் கட்சியின் செயல்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# பேராதனையில் ஆர்ப்பாட்டம் பொலிஸாரால் கலைக்கப்பட்டது!

கண்டி, ஜன. 19

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டும் மற்றும் தண்ணீர் தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பேராதனை பொலிஸாரால் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கொழும்பு பிரதான வீதியானது பேராதனை பல்கலைக்கழகத்துக்கு முன்பாக சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.